# மயானத்தில் கிடந்த சடலம்; மண்டைதீவு வாலிபர் என்ற சந்தேகம் வலுப்பெறுகிறது

Registered as a News peper in Ceylon விலை சதம் 15 ★

ஈழநாடு

EELANADU

தபாலபெட்டி எண்: 49
போன்: 389
National Tamil Daily
மலர் 11
இதழ்: 114
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் வைகாசி 23 ரபி;அவ் 19 வியாழக்கிழமை [5-6-69]

படித்துவிட்டீர்களா!!
''தமிழன்''
நான்காவது இதழ்
விலை சதம் 10

யாழ்ப்பாணம், வியாழன்
மண்டைதீவிலிருந்து காணமல் போய்விட்டதாக கூறப்படும் கே. ஸ்ரீ. காந்தன் என்ற வாலிபர்தான், சுன்னுகம் மயானத்தில் கொலை செய்யப்பட்ட வாலிபராக இருக்கலாம் என்ற சந்தேகம் பொலிஸ் வட்டாரங்களில் வலுப்பெற்றுள்ளது. கொலையுண்ட வாலிபர் அணிந்திருந்த சாரத்தில் உள்ள கே. எஸ். என்ற சலவைக்குறி இந்தச் சந்தேகத்தை வலுப்படுத்துவதாகவும் கூறப்படுகிறது. இன்னும் இரண்டொரு தினங்களில், இச்சந்தேகத்திற்கு முடிவு காணப்படலாம் என பொலிசார் நம்புகின்றனர்.

இக்கொலை சம்பந்தமாக சுன்னுகம் பகுதியைச் சேர்ந்தவரும், முன்பு பல வழக்குகளில் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் ஒருவரை பொலிசார் தேடி வருகின்றனர். இன்று அல்லது நாளை இவர் கைதுசெய்யப்படலாமெனப் பொலிசார் கருதுகின்றனர்.

யாழ்ப்பாண நகரில்தான் இக்கொலை நடைபெற்றதென்பதற்கு எவ்விதமான சந்தேகமுமில்லையென்பது பொலிசார் நடத்திவரும் விசாரணையிலிருந்து தெரியவருகிறது.

இது சம்பந்தமாக நேற்று சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட 70 வயதான இளையபிள்ளை என்ற வயோதிப மாது தொடர்ந்து விசாரணை செய்யப்பட்டு வருகிறுர்.

இப்பெண்ணின் வீட்டிலிருந்து சுமார் அரைமைல் தூரத்தில் உள்ள தோட்டத்தில் பொலிஸார் ஒரு கோடரியைக் கைப்பற்றியிருக்கின்றனர். கொலைக்கு இக் கோடரியும் பாவிக்கப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

மாவிட்டபுரம்

## தடைஉத்தரவு வழக்கு தீர்ப்பு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், வியாழன்
மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் தடை உத்தரவு வழக்கு தீர்ப்பு இம்மாதம் 17-ந் திகதிக்குப் பின் போடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி ஜனுப் இஸ்மயில் நேற்றுக் காலை தீர்ப்பு வழங்குவதை பின் போட்டார். நீதிமன்றத்திற்கு வாதியான திரு. கணேசனும், பிரதிவாதியான முன்னள் வவனியா எம். பி. திரு. சி. சுந்தரலிங்கமும் வந்திருந்தனர்.

மாவிட்டபுரம் கோவிலுக்குள் செல்ல தனக்கு உரிமையுண்டென்றும், தன்னை தடுப்பதற்கு பிரதிவாதியான சி. சுந்தரலிங்கத்திற்கு உரிமையில்லாததால் அவரைத் தடுக்கக்கூடாதென உத்தரவிடும்படி கோரி வாதியான சா. கணேசன் ஒரு மனு மூலம் கோரியிருந்தார்.

தீர்ப்பையறிவதற்கு கோர்ட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் ஏராளமானேர் திரண்டிருந்தனர்.

# தெலிங்கானு தனி ராஜ்ய கிளர்ச்சி ஆந்திராவில் உச்சக் கட்டம்

## இலங்கை தமிழ்ப்படங்கள் தமிழ்நாட்டுக்கு ஏற்றுமதி

### இராசதுரை எம். பி தகவல்

— நமது நிருபர் எஸ். ஜே. ஜெயக்குமார் —

உடுப்பிட்டி, புதன்
''இலங்கையில் தயாரிக்கப்படும் தமிழ்த் திரைப்படங்கள் தமிழகத்தில் திரையிடப்படும். இலங்கைத் திரைப்படங்களை இந்தியாவுக்கு அனுப்பும் முயற்சியில் இரு நாட்டுத் திரைப்படத் தயாரிப்பாளர்களிடமும் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளேன்.''

இத்தகவலை மட்டக்களப்பு முதலாவது எம். பி. திரு. செ. இராசதுரை 'ஈழநாடு' நிருபரிடம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு எம். பி. நமது நிருபருக்களித்த பேட்டியில் தொடர்ந்து கூறியதாவது:

''தமிழ்த் திரைப்படங்களைத் தடைசெய்ய முயல்வது பொருமைத்தனமான ஒருசெயல். இதனுல் தமிழ்க் கலாச்சாரம் மங்கவேண்டிய

இதற்குப் பூரண ஒத்துழைப்புத் தந்துள்ளனர். இலங்கையில் தயாரான திரைப்படங்களை இந்தியாவுக்கு அனுப்பி அப்படங்களைக் கொண்ட ஒரு திரைப்பட விழாவைச் சென்னையில் தமிழக முன்னணி நடிகர்கள் முன்னிலையில் நடாத்த ஒழுங்குகள் செய்துள்ளேன்.''

நீங்கள் இந்தியாவில் ஒரு திரைப்படத்தில் நடிக்கிறீர்களா என நமது நிருபர், திரு. இராசதுரை எம். பி. யிடம் கேட்டபோது அப்படியானுல் அப்படம் இலங்கையில் திரையிடப்பட்டதும் நீங்கள் கண்டுகொள்ளலாந்தானே என அவர் சிரித்தபடி கூறினுர்.

— —

யாழ்ப்பாணம், புதன்
தற்போது யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் சென்னை

கொழும்பில்

## 2000 வீடுகள்

கோட்டை, செவ்.
கொழும்பு நகரத்தில் 2000 தட்டை வீடுகள் கட்டி குறைந்த வாடகைக்கு கொடுப்பதென கொழும்பு மாநகரசபை முடிவு செய்துள்ளது. 2 கோடி 90 லட்சம் ரூபாய் இந்த வீடுகளுக்கு ஒதுக்கப்படும்.

உள்ளூராட்சி அமைச்சரின் பரிசீலனைக்குப் பிறகு கட்டடவேலைகள் ஆரம்பமாகும்.

— —

## ஐ. தே. கட்சிக் கிளை

திருக்காணமலை, புதன்
முள்ளிப்பொத்தானையில் ஐககியதேசியக் கட்சியின் புதிய கிளையொன்று அமைக்கப்பட்டுள்ளது. பின் வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்:- தலைவர்: ஜனுப் எஸ். எம். ஹனிபா, செய

## நிலைமையை நேரில் ஆராய சவாண் செல்கிறுர்

### பொலிஸ் சுட்டதில் மேலும் 7 பேர் பலி

ஹைதராபாத், ஜூன் 4

**ஆந்திரா ராஜ்யத்திலிருந்து தெலிங்கானுவைத் தனி ராஜ்யமாகப் பிரிக்கவேண்டுமெனக் கோரி ஆந்திராவில் நடைபெற்றுவரும் கிளர்ச்சி இப்போது உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது. இன்று காலை ஹைதராபாத்திலும், செக்கந்தராபாத்திலும் கிளர்ச்சிக்காரர்களை அடக்குவதற்குப் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஏழு பேர் மாண்டதாக உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்று கூறியது. நேற்று நடந்த துப்பாக்கிப் பிரயோகங்களில் ஆறு பேர் பலியானுர்கள்.**

தெலிங்கானு தனி ராஜ்யக் கோரிக்கை கிளர்ச்சி சம்பந்தமாகத் தோன்றியுள்ள நிலைமை பற்றி ஆந்திரப் பிரதேச முதலமைச்சர் திரு. பிரும்மானந்த ரெட்டி இன்று காலை பிரதமர் திருமதி இந்திராகாந்தி, துணைப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய், உள்துறை மந்திரி திரு. சவாண் ஆகியோரைச் சந்தித்து

ஆந்திராவில் எழுந்துள்ள அரசியல் நிலைமை பற்றி நேரில் ஆராய்வதற்காக உள்துறை அமைச்சர் திரு. சவாண் இன்னும் சில தினங்களில் ஆந்திராவுக்குச் செல்லவிருக்கிறுர்.

ஹைதராபாத், செக்கந்திராபாத், வாரங்கல், காலி[illegible]சிக்குடா ஆகிய [illegible] இடங்களிலும் மற்றும் பல இடங்களிலும்

சாலைகள் மற்றும் அரசாங்கக் கட்டிடங்கள், தனியார் கடைகள், வீடுகளுக்குத் தீ வைப்பது, கொள்ளையடிப்பது போன்ற வன்முறைச் செயல்களும், ரயில்களைத் தடுத்து நிறுத்துவது, ரயில் பஸ், கார் ஆகிய வாகனங்களுக்குக் கல் வீசித் தாக்குவது போன்ற செயல்களும் நீடித்துவருகின்றன.

பல இடங்களில் இன்று பஸ், ரயில் சேவைகள்

## எரிந்த கூப்பன்கள் மீண்ட விந்தை

### உரியவர் மீது சட்டநடவடிக்கை

யாழ்ப்பாணம், வியாழன்
நெருப்புப் பற்று எரிந்ததாகத் தெரிவிக்கப்பட்ட கூப்பன் புத்தகம் ஒன்று மீண்டும் வெளிவந்த சம்பவம் யாழ்ப்பாணம் காரியாதிகாரி கந்தோர் உத்தியோகஸ்தர்களை பெரிதும் ஆச்சரியத்திலும், வியப்பிலும் ஆழ்த்தியுள்ளது.

குருநகரைச் சேர்ந்த ஒரு குடும்பத்தவர் தனது கூப்பன் புத்தகங்கள் மீது பூனை விளையாடும் போது விளக்குத் தட்டி விழுந்ததால் எரிந்து விட்டதாகவும், புதுக் கூப்பன்கள் தரும்படியும் யாழ். காரியாதிகாரி கந்தோருக்கு விண்ணப்பம்

கூப்பன்கள் எங்கோ தவறிவிட்டதால் பொய்த் தகவல் கொடுத்து இவர் புதுக் கூப்பன்கள்பெற முயற்சித்ததாக இது சம்பந்தமாக நடைபெற்ற விசாரணையில் தெரியவந்துள்ளது.

கூப்பன்களை மாடுதின்றதாகவோ, எரிந்து விட்டதாகவோ தெரிவித்தால் தான் புதுக் கூப்பன் பெற முடியுமென்ற விதி இருப்பதே சிலர் இவ்வாறு பொய்த் தகவல் கொடுத்ததற்குக் காரணமாக இருக்கலாம் என்றும், இது சம்பந்தமாக சம்பந்தப்பட்டவர் மீது சட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டியில் தொடர்ந்து கூறியதாவது:

''தமிழ்த் திரைப்படங்களைத் தடைசெய்ய முயல்வது பொருமைத்தனமான ஒருசெயல். இதனுல் தமிழ்க் கலாச்சாரம் மங்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும். ஆபாசக் காட்சிகள், பிரசாரம் முதலிய படங்களைத் தடைசெய்யவேண்டியது அவசியந்தான். ஆனுல் தணிக்கைச் சபையினர் படத்தில் வரும் தடைசெய்யப்படவேண்டிய காட்சிகளை நீக்கிவிட்டுத் திரையிட.லாம்.

தமிழ்ப் படங்கள் என்ற காரணத்தினுல் தி. மு. க. பூர்சாண்டியைக் காட்டி, அவற்றைத் தடைசெய்து தமிழினத்தின் பண்பாடு, கலை, கலாச்சாரங்களில் தமிழகத்திற்கும்— ஈழத்திற்கும் இரும்புத்திரை போட்டுத் தடுக்க முயற்சிகள் செய்துவருகின்றனர் வகுப்புவாதிகள்.

இவ்வித அரசியல் பிரச்சாரங்களை ஒருபோதும் அரசாங்கம் ஒப்புக்கொள்ளக் கூடாது. இலங்கைப் படங்களை ஏன் இந்தியாவில் காட்டவில்லை என்று கேட்பது நியாயமற்றது இலங்கைத் தயாரிப்பாளர்கள் ஆட்சிமன்றம் மூலம் முயன்றிருந்தால் இத்தகைய கேள்விக்கு இடமிருந்திருக்காது.

இலங்கையிலிருந்து தமிழகத்திற்குத் திரைப்படங்களை அனுப்பும் முயற்சியில் நான் ஈடுபட்டுள்ளேன். இந்தியத் தயாரிப்பாளர்கள் ... தும் நீங்கள் கண்டுகொள்ளலாந்தானே என அவர் சிரித்தபடி கூறினுர்.

---

யாழ்ப்பாணம், புதன்

தற்போது யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் சென்னை சுயப்பாக்கம் சோமசுந்தரம் செட்டியார் நேற்று விமானத்தில் தாயகம் திரும்பினுர்.

---

... ஐக்கியதேசியக் கட்சியின் புதிய கிளையொன்று அமைக்கப்பட்டுள்ளது. பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்:- தலைவர்: ஜனுப் எஸ். எம். ஹனிபா, செயலாளர்: திரு. எஸ். சிவப்பிரகாசம், பொருளாளர்: திரு. எம். அப்துல் அசீஸ்.

---

... சர் திரு. பிரும்மானந்த ரெட்டி இன்று காலை பிரதமர் திருமதி இந்திராகாந்தி, துணைப்பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய், உள்துறை மந்திரி திரு. சவாண் ஆகியோரைச் சந்தித்து ஆலோசனை நடத்தினுர். ... களில் ஆந்திராவுக்குச் செல்லவிருக்கிறுர்.

ஹைதராபாத், செக்குந்திராபாத், வாரங்கல், காலிகுடி, காச்சிக்குடா ஆகிய முக்கிய இடங்களிலும் மற்றும் பல இடங்களிலும் தபால்நிலையங்கள் பாட... செயல்களும், ரயில்களைக் தடுத்து நிறுத்துவது, ரயில் பஸ், கார் ஆகிய வாகனங்களுக்குக் கல் வீசித் தாக்குவது போன்ற செயல்களும் நீடித்துவருகின்றன.

பல இடங்களில் இன்று பஸ், ரயில்சேவைகள் நடைபெறவில்லை. செக்குந்திராபாத்திலும், ஹைதராபாத்திலும் ஊரடங்கு உத்தரவு நீடிக்கப்பட்டிருக்கிறது. தபால்நிலையங்கள், தந்தி இணைப்புக் காரியாலயங்கள், பாடசாலைகள் ஆகியவைகளில் இன்று பலத்த பொலீஸ், இராணுவப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வாரங்கலில் நிலைமை இன்று அமைதியாயிருப்பதாக தகவல்கள் தெரிவித்தன ஆயினும் அங்கும் மாலை 8 மணி முதல் காலை 6 மணிவரையிலான ஊரடங்கு உத்தரவு நீடிக்கப்பட்டிருக்கிறது.

கத்தி, வாள், ஈட்டி, கற்கள் மற்றும் துப்பாக்கி, வெடி மருந்துகள் கொண்டு செல்வதைத் தடைசெய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருபதுடன் உரத்துப் பாடலகள் பாடுவதற்கும் தடைவிதிக்கப்பட்டிருக்கிறது.

(மூன்றும் பக்கமும் பார்க்க)

---

... குடும்பத்தவர் அனைவரும் புத்தகங்கள் மீது பூனை விளையாடும் போது விளக்குத் தட்டி விழுந்ததால் எரிந்து விட்டதாகவும், புதுக் கூப்பன்கள் தரும்படியும் யாழ். காரியாதிகாரி கந்தோருக்கு விண்ணப்பம் செய்திருந்தார்.

ஆனுல் பழைய கூப்பன்களை எவ்வாருே மீண்டும் வெளிவந்தனவாம், பழைய ... தான் புதுக் கூப்பன் பெற முடியுமென்று ... இருப்பதே சிலர் இவ்வாறு பொய்த் தகவல் கொடுத்ததற்குக் காரணமாக இருக்கலாம் என்றும், இது சம்பந்தமாக சம்பந்தப்பட்டவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாகவும் காரியாதிகாரி அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(கா. நி)

---

### ஜப்பான் இலங்கைக்கு வழங்குகிறது

## ஒன்றரை லட்சம் ரூபாய் விவசாய உபகரணங்கள்

கோட்டை, செவ்வாய்

ஒன்றரை லட்சம் ரூபாய் பெறுமதியான விவசாய உபகாரணங்களை ஜப்பன் இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்குகிறது.

இன்று கொழும்பில் நடைபெறும் வைபவமொன்றில் இந்த உபகரணங்கள் வழங்கப்படும்.

ஜப்பானிய தூதர் காணி நீர்ப்பாசன அமைச்சரிடம் இந்த அன்பளிப்பை கையளிப்பார்.

யந்திரக் கலப்பைகள் உழவு யந்திரங்கள் போன்ற பலவித உபகரணங்கள் இதில் அடங்கும்.

பேராதனை விவசாய நிலைத்தில் இந்த விவசாய உபகரணங்கள் பாவிக்கப்படும்.

### பரிதாப மரணம்

களுவாகல, செவ்

தமது சிநேகதர்களுடன் நீந்திக் கொண்டிருந்த 20 வயது வாலிபர் ஒருவரை வெள்ளம்அடித்துக்கொண்டு சென்றுவிட்ட பரிதாப சம்பவம் களுவாகலை என்னுமிடத்தில் நடைபெற்றுள்ளது.

டி. சோமபாலா என்ற இந்த வாலிபன், தமது சினேகிதர்களுடன் தொடர்ந்து பெய்துவந்த மழை வெள்ளத்தில் நீந்திப்பழகியதாகவும், அப்போது நீரோட்டத்தினுல் அடித்துச்செல்லப்பட்டு மரணமானதாகவும் தெரிவிக்கப்பட்டது. மரணவிசாரணை நடத்திய திரு அத்தநாயக்கா நீரில் மூழ்கியதால் ஏற்பட்டமரணம் எனத் தீர்ப்பளித்தார்.

# புதிய நியமனம் பெற்ற தமிழர்கள்

கொழும்பு, செவ்வாய்

பொச்சேவைக் கமிஷனினுல் புதிய பதவிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள தமிழர்கள் விபரம் வருமாறு:

புள்ளிவிபர இலாகாவில் நிமணராக திரு வி. துரைராசா நியமிக்கப்பட்டுள்ளார். வருமானவரி இலாகாசில் திரு ஏ. சிவசண்முகநாதன் உதவி அசைஸ்சராக நியமனம் பெற்றுள்ளார்.

என். புயபாலராஜன், ரி. சுப்பிரமணியம், பி. நடராசா, ஏ. சாம்பசிவம், ஆகியோர் பொது மராமத்து பகுதியில் சுப்பிரிண்டன், என்ஜினியர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

வி. கந்தசாமி, ரி. கிருஷ்ணராசா, வி. மகேந்திரன், டபிள்யூ. என். ஜே. சத்தியநாதன், எஸ். வி. செல்வரத்தினம், கே. சிவசுப்பிரமணியம் ஆகியோர் மின்சார இலாகாவில் தற்காலிக என்ஜினியர்களாகப் பதவி பெற்றுள்ளனர்.

ஈ. எம். வஸ்தியாம்பிள்ளை கே. சுந்தரமூர்த்தி, கே. சுந்தரலிங்கம் ஆகிய மூவரும் ஸ்தலஸ்தாபன அமைச்சில் தண்ணீர் விநியோகப் பிரிவில் சிவில் என்ஜினியர்களாக நியமனம் பெற்றுள்ளனர்.

ஆர். இரத்தினசிங்கம் புகையிரத சுப்பிரிண்டன் என்ஜினியராகவும், வி. அம்பலவாணர், ஏ. எஸ் குணசிங்கம், எஸ். சதாசிவப் பிள்ளை, ஆர். மகாலிங்கசிவம், எஸ். நரபாலசிங்கம், பி எஸ். பார் குமாரகுலசிங்கம் ஆகியோர் திட்ட அபிவிடுத்தி இலாகாவில் உதவி டைரக்டர்களாகவும் வி. சபாரத்தினம் கலால் இலாகா பிரதம இன்ஸ்பெக்டராகவும் நியமனம் பெற்றுள்ளனர்.

## 22 பேருக்கு மட்டுமே தென்னை செய்கை காணி

### 1500 பேர் விண்ணப்பித்தனராம்

யாழ்ப்பாணம், வியா.

பளையிலுள்ள இயக்கச்சியில் தென்னைச் செய்கைக்கு மத்திய தர வகுப்பினருக்கு காணி வழங்கவென அரசாங்கம் எடுத்த முயற்சியொன்று இப்போது படுதோல்வியில் முடிவடைந்துள்ளதாம்.

இதனுல் அரசாங்கத்துக்கு சுமார் 8000 ரூபா வரையில் செலவாகியிருக்கலாம் எனவும் இப்போது மதிப்பிடப்பட்டுள்ளது.

பளை இயக்கச்சியில் ஒவ்வொருவருக்கும் தலா 25ஏக்கர் வீதம் 80 பேருக்குத் தென்னைச் செய்கைக்குக் காணி வழங்கவென கடந்த ஏப்ரல் மாதம் அரசாங்க கஸட் மூலம் விண்ணப்பம் கோரப்பட்டிருந்தது கடந்த மே மாதம் 20-ம்திகதியுடன் இதற்கான விண்ணப்பங்கள் கடைசியாக ஏற்றுக்கொள்ளப்பட்டபோது சுமார் 1500 பேர் இதற்கு விண்ணப்பித்திருந்தனர்.

ஆனுல் காணி இலாகா, மண்வள ஆராய்ச்சியாளர்கள் தமது ஆராய்ச்சி முடிவில் இங்குள்ள 2000 ஏக்கர் காணியிலும் சுமார் 550 ஏக்கர் காணி மட்டும் தென்னைச் செய்கைக்கு உகந்ததென அறிக்கை சமர்ப்பித்துள்ளனர். இதன்படி இங்கு 22 பேருக்கு மட்டுமே தலா 25 ஏக்கர் வீதம் காணி வழங்கப்படலாமென சம்பந்தப்பட்ட உயர் அதிகாரி ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

இதுமட்டுமின்றி மிருசுவிலிலும் தென்னைச் செய்கைக்கென விண்ணப்பம் கோரப்பட்ட காணியொன்றைஇப்போது சுமார் 5000 ரூபா செலவில் பரிசோதனை செய்தபோது அதுவும்கூட தென்னைச் செய்கைக்கு உதவாத களிமண்தறை என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாம்.

(கா. நி)

## நோர்வே எல்லையில் ஒத்திகை

ஒஸ்லோ-ஜூன்-4

சனிக்கிழமையன்று சோவியத் விமானம் தாங்கிக் கப்பலும் யுத்தக்கப்பலும் ரஷ்யக் கடலில் நோர்வேக்கு சமீபத்தில் ஒத்திகை நடத்தியுள்ளதாக நோர்வே பாதுகாப்பு இலாகாவைச்சேர்ந்த அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

---

ஈழநாடு பத்தாவது ஆண்டு நிறைவு விழா

# “சின்னமாமியே! உன் சின்ன மகள் எங்கே?” யாழ். திறந்த வெளியரங்கில் கண்டு களியுங்கள்

## வாத்திய இசைகள் முழங்கும் ஊர்வலம் இங்கே!

யாழ்ப்பாணம், வியாழன்

சிறுவர் முதல் பெரியோர் வரை, பூட்டன்கள் முதல் பாட்டன்கள் வரை, வாலைக் குமரிகள், 'மினிஸ்கேட்' மங்கைகள், வாலிபர்கள், முதியோர்கள் அனைவரதும் மனதை மயங்க வைக்கும் உடையலங்கார, விவசாய, வர்த்தக, விநோத உடைப் போட்டிகளின் பவனி எப்போ, எப்பொ என்று தானே அங்கலாய்க்கிறீர்கள்?

ஆமாம் இன்னும் பத்தே பத்து நாட்கள் தான் இருக்கின்றது: இவற்றை நீங்கள் கண்ணுரக் கண்டு, மனதார மகிழ்ந்து ரசிப்படைய இம்மாதம் 12-ம், 13-ம் 14-ம் திகதிகளில் நடைபெறும் 'ஈழநாடு' பத்தாவது ஆண்டு நிறைவு விழாவின் இறுதி நாளான 14-ந் திகதியின் காலை விசேஷநிகழ்ச்சியாகவே இப்பவனி நடைபெறுகின்றது.

யாழ்ப்பாண நகரின் தலைசிறந்த வர்த்தகஸ்தாபனங்களான யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கம், மில்க்வைட் சோப் ஸ்தாபனம், நோர்தன் இன்டஸ்றீஸ் போன்ற பல வர்த்தக ஸ்தாபனங்கள் கலந்துகொள்ள துள்ளனவந்தினசரி இதற்கான விண்ணப்பங்கள் வந்தவண்ணமே இருக்கின்றன.

நாதஸ்வரஇசை வானம் முன்னே செல்லும் இவ் ஊர்வலத்தில் இரட்டையர்குழு போன்ற பல வாத்தியக் கோஷ்டிகளும் கலந்துகொள்ள முன்வந்துள்ளன.

இதில் மேலும் கலந்து கொள்ளவிரும்பும் வர்த்தக ஸ்தாபனங்களோ, விவசாயக்கழகங்களோ, நடனநாடக சங்கங்களோ, வாத்திய இசை குழுக்களோ யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதியிலுள்ள 'ஈழநாடு' அலுவலகத்துடன் இம்மாதம் 12-ந் திகதிக்கு முன்னர் கடிதமூலமோ நேரடியாகவோ தொடர்பு கொள்ளலாம்.

இப்பவனியின் மற்ருெரு அம்சமாக இடம் பெறுகின்றது. விநோத உடைப் போட்டி வயதுக் கட்டுப்பாடு எதுவுமின்றி நடைபெறும் இப்போட்டியில் கலந்துகொள்வோர் இம்மாதம் 12-ந் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளவும்.

ஊர்வல பவனி 14-ந்திகதி காலை சரியாக 8 மணிக்கு 'ஈழநாடு' காரியாலய வாசலிலிருந்து ஆரம்பமாகும்.

இதே ஊர்வலத்திலும் அன்றிரவு திறந்தவெளியில் நடைபெறும் கலைவிழாவிலும் ''சின்னமாமியே! உன் சின்னமகள் எங்கே?'' என்ற பாடல் புகழ்பெற்ற திரு. நித்தி கனகரத்தினத்தின் பல பிரசித்தி பெற்ற பாடல்களை நீங்கள் கேட்டு இன்புறலாம்.

**'ஈழநாடு' மர்ம மனிதன் யார்? போட்டி விதிகள் என்ன? நாளை 'ஈழநாட்'டைத் தவருது வாசியுங்கள்.**

(கா. நி.)

## நம்பிக்கை யில்லா பிரேரணை

கோட்டை, புதன்

தொழில் வேலை வாய்ப்பு மந்திரி திரு. எம். ஏச். முகமட் மீது எதிர்க்கட்சியினரால் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம் இம்மாதம் 12-ம் தேதி விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கிறது.

ஆட்சிமன்ற எதிர்க்கட்சி குழுவினர் இவ்விவாதத்தில் கலந்து கொள்பவர்கள் பட்டியலை தயார் செய்ய இம் மாதம் 9-ம்தேதி கூடுகின்றனர்.

## இராணுவ தாக்குதலாம்

மன்னுர், வியாழன்

தலைமன்னுர் சட்டவிரோத குடியேற்ற தடுப்பு முகாமில் காவல் வைக்கப்பட்டிருந்த பஞ்சவர்ணம் என்ற நபர் இராணுவத்தினரின் பலத்த தாக்குதலுக்குள்ளானுராம். அவர் இப்பொழுது சிகிச்சைபெற்று வருகிறுர் பொலிசார் முன்னிலையில் இச்சம்பவம் நடந்ததாகக் கூறப்படுகிறது. இச் சம்பவம்பற்றி பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

## ஈழநாடு விழா

### இன்றைய உதைபந்தாட்ட மோதல்கள்

யாழ்ப்பாணம், வியா.

'ஈழநாடு' பத்தாவது ஆண்டுநிறைவுவிழாவை முன்னிட்டு நேற்றுஆரம்பமாகி நடைபெறும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இன்றைய மோதல்கள்:

சென்பற்றிக்ஸ் மைதானத்தில் மாலை 3-45 மணிக்கு நடைபெறும் போட்டியில் கிறீன் பீல்டும் சென். மேரிஸும்மோதும் 5மணிக்கு நடைபெறும் போட்டியில் வல்வை யுனைட்டெட்டும் மோதும்.

கோட்டை மைதானத்தில் மாலை 3-45மணிக்கு நடக்கும் போட்டியில் சென். யோசெப்பும், பாடும் மீனும் மோதும். 5 மணிக்கு நடக்கும் போட்டியில் சென் நீக்கலஸும், பொலிஸ் கோஷ்டியும் மோதும்.

(கா. நி.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

காஸ்-எலெக்ட்ரிக் வெல்டிங் மிஷின்களில் வேலைசெய்யக் கூடிய அனுபவமுள்ள தொழிலாளர் தேவை. 10-6-69க்கு முன் நேரில் விண்ணப்பிக்கவும். பைனல் ரேணிங் வேக்ஸ் 103, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம். 1178

### விற்பனைக்கு

தினம் 15 போத்தல் பால் கறக்கும் விறீஷியன் இளம் பசு விற்பனைக்குண்டு. இருவாரங்களில் கன்று ஈனும். அ. விக்கினேஸ்வரன், 159, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 1179

### கல்வி

ஆசிரிய கலாசாலை பிரவேசப் பரீட்சை விண்ணப்பப் பத்திரங்கள்சதம் ஐந்துடன் பெற்றுக்கொள்ளலாம். மேற்படி பரீட்சைக்குரிய வகுப்புகள் ஆனி 11-ந் திகதி ஆரம்பிக்கப்படுகிறது. சிங்களம் காலை மாலை வகுப்புக்கள் (உத்தியோகஸ்தர்களுக்கு விசேட மாலை வகுப்புகள்) G. C. E. A/L பௌதிக வகுப்பு ஆனி 11-ந் திகதி ஆரம்பமாகிறது. College of Education Opposite the old Bus Stand, Jaffna. 1177

6-ம், 7-ம் தர தகுதிகாண் பரீட்சைகள் - 2-ம் தவணை மாதிரி வினாவிடைகள் - ஆங்கிலம் ரூபா 1/- தொகையாக வாங்குவோருக்கு கழிவு உண்டு. யூனைட்டெட் இன்ஸ்டிடியூட்ஸ், நெல்லியடி, கரவெட்டி. 1180

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வியாழன் 5-6-69

செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ அன் 61 மீ

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை 6-45 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன் 61 மீ

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 தொழிலா

## இன்றைய பலன்

5-6-69

வைகாசி மாதம்.

23-ம் திகதி

வியாழக்கிழமை

திதி- பஞ்சமி பகல் 7-25 மேல் சஷ்டி.

நட்சத்திரம்- திருவோணம் பின் இரவு 5-20 மேல் அவிட்டம்.

ராகுகாலம்- 1-22 — 2-52.

சுபநேரம்- 7-22 — 8-52.

இன்று பிறந்தவர்களுக்கு- இவ்வாண்டு சமபலனையே குறிப்பிடுகின்றது. வருட ஆரம்பத்தில் எதிர்பாராத சில தொல்லைகள் தலைதூக்கலாம். எனினும் கலவரமடைய வேண்டியதில்லை. இதைத் தொடர்ந்து காலம் படிப்படியாகச் சிறப்படையும். மாணவர்களுக்கும் கல்வியில் அபிவிருத்தி ஏற்படும். பொறுமை விரும்பத்தக்கது.

மேஷம்- வாகனசுகம், வாழ்விலும் நலம்.

ரிஷிபம்- பாக்கிய விருத்தி, பரம்பொருள் சிந்தை.

மிதுனம்: அரச பயம், ஆயுதபீடை.

கடகம்- குடும்ப மகிழ்ச்சி, குழந்தைச்செல்வம்.

சிம்மம்- தொழிலில் தொல்லை, துன்பம் தொடரும்.

கன்னி- குரு விசுவாசம், குறிக்கோள் வெற்றி.

துலாம்- செய்தொழில் சிறப்பு, தெய்வத்தின் துணை.

விருச்சிகம்- புத்திரர் புகழ், புதுமையில் நாட்டம்.

தனுசு- பொருள்வரவு பொல்லாங்கு கேட்டல்.

மகரம்- மக்கள் பிணி, மனப் போராட்டம்.

கும்பம்- குடும்ப நலன், குதூகல மிகுதி.

மீனம்- சிந்தனை மிகுதி, சகோதர சஞ்சலம்.

— சோதிடக்கலாநிதி —

திருமலை வேலுப்பிள்ளை

காங்கேசன்துறை பகுதி விளையாட்டு:

# கீரிமலை நகுலேஸ்வரா முதலிடம் பெற்றது

அளவெட்டி, புதன்

காங்கேசன்துறை வட்டாரப் பாடசாலைகள் விளையாட்டுப்போட்டியில் 20க்கு மேற்பட்ட பாடசாலைகள் கலந்துகொண்டன. இவ் விளையாட்டுப்போட்டியில் கீரிமலை நகுலேஸ்வர வித்தியாலயம் முதலிடத்தையும் பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயம் 2-ம் இடத்தையும், இளவாலை மெய்கண்டான் வித்தியாலயம் மூன்றும் இடத்தையும் பெற்றன.

இப்போட்டி முடிவுகள் பின்வருமாறு:

100 மீற்றர் ஓட்டம்: கீழ்ப்பிரிவு ஆண்கள்: க. தவேந்திரன் (இளவாலை மெய்கண்டான்), பூ. மோகனராசா (கீரிமலை நகுலேஸ்வரா), செ. சிவலிங்கம் (சேர் கனகசபை பன்னாலை) மத்தியபிரிவு ஆண்கள்: க. சிவராசா (கீரிமலை நகுலேஸ்வரா), கா. ஜெயகுமாரன் (தெல்லிப்பழை சைவப்பிரகாசா), நா. அண்ணாமலை (கட்டுவன் புலம்) மேற்பிரிவு ஆண்கள்: ந. கிருஷ்ணமூர்த்தி (சேர் கனகசபை பன்னாலை), சி. சிவபாலன் (இளவாலை மெய்கண்டான்), மு. தவயோகராசா (மல்லாகம் அமெரிக்க மிசன்) கீழ்ப்பிரிவு பெண்கள்: அ. சகுந்தலாதேவி (மயிலிட்டி ஞானோதயா), கெ. மேரி யோசெப் (மல்லாகம் குளமங்கால் றோ. க. பா.), ம. எலிசபெத் (பெரியவிளான் றோ. க. பா.) மத்தியபிரிவு பெண்கள்: சி. விஜயலட்சுமி (கீரிமலை நகுலேஸ்வரா), வ. செல்வலட்சுமி (கீரிமலை நகுலேஸ்வரா) மா. லலிதகுமாரி (மல்லாகம் அ. மி.) மேற்பிரிவு பெண்கள்; ச. தங்கமணி (சேர் கனகசபை பன்னாலை), க. சரஸ்வதியம்மா (கீரிமலை நகுலேஸ்வரா), சி. சரோஜினிதேவி (கீரிமலை நகுலேஸ்வரா).

200 மீற்றர் ஓட்டம்- மத்தியபிரிவு ஆண்கள்: சு. சிவராசா (கீரிமலை நகுலேஸ்வரா), கா. ஜெயகுமார் தெல்லிப்பழை சைவப்பிரகாசா), ந. பத்மநாதன் (இளவாலை மெய்கண்டான்) மேற்பிரிவு ஆண்கள்: ந. கிருஷ்ணமூர்த்தி (பன்னாலை சேர் கனகசபை), பொ. யோகேஸ்வரன் (இளவாலை மெய்கண்டான்), சி. சிவ

## சம்பந்தர் விழா போட்டி முடிவுகள்

கோப்பாய், புதன்

கோப்பாய்த் திருவருள் தவநெறி மன்றத்தாரால் ஞானசம்பந்தர் விழாவையொட்டி நடாத்தப்பட்ட சமய அறிவுப் போட்டியில் பரிசுபெற்றோர் விபரம் வருமாறு:

கே. கோகுலகாந்தன், ஏ. கனகசூரியர், ஏ. நற்குணனந்தன், ஆ. திலகம், எஸ். சிவேந்திரசர்மா, கே. வரதராஜன், பி. கஜேந்திரன், எம். பரமேஸ்வரன், ரி. செல்வமணி, கே. வேலாயுதம்.

போட்டியில் வெற்றிபெற்றோருக்குக் கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளை பரிசுகளை வழங்கினார்.

0 0 0

சுழிபுரம், புதன்

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் மாணவர் மன்றத்தினரால் நடத்தப்பட்ட சம்பந்தர் பேச்சுப்போட்டியில் பரிசு பெற்றவர்கள் விபரம் வருமாறு:-

கீழ்ப்பிரிவு- ந. நாகேஷ்வரி, பா. அரிமருகன், ஆ. குணதேவி.

மேற்பிரிவு- ந. விஜயரத்தினம், மு. பாலசுப்பிரமணியம். ச. தனலட்சுமி.

இவர்களுக்கு ஆசிரியர் இ. அப்பாத்துரை, குருபூசை விழாவில் பரிசில்கள் வழங்கினார். ......

## வருடாந்த விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம் புதன்

யாழ்ப்பாணம் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய வருடாந்த விளையாட்டுப் போட்டி இம்மாதம் 6-ம் திகதி யாழ்ப்பாணம் திறந்த வெளியரங்கில் நடைபெறவிருக்கின்றது. பரீட்சைப் பகுதி உதவிக் கமிஷனர் திரு. வி. சதாசிவமும் அவரது பாரியாரும் இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து பரிசில்கள் வழங்குவர்.

வலி. மேற்கு

## கயரோக நிவாரணசங்க போட்டி முடிவுகள்

சுழிபுரம், புதன்

இலங்கை கயரோக நிவாரண சங்கத்தின் வலிகாமம் மேற்குக் கிளையின் பன்னிரண்டாவது ஆண்டு பொருட்காட்சியையும் விழாவையும் ஒட்டி நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்றவர்கள் விபரம் பின்வருமாறு:

**அறிவு எழுத்துப் பரீட்சை**

ம. பற்றிமா வைலெற் (இளவாலை திருக்குடும்பக் கன்னியர்மடம்), மா. குலேந்திரவதி (முருகமூர்த்தி வித்தியாசாலை) அராலி), தி. கிரிஸ்ரபெல்பாலசௌந்தரி (இளவாலை திருக்குடும்பக்கன்னியர் மடம்), க. கணபதிப்பிள்ளை (அராலி வள்ளியம்மை வித்தியாசாலை), சு. வசர்தராணி (முருகமூர்த்திவித்தியாசாலை அராலி).

**கட்டுரை**

பொன்னம்பலம் இரதிவதனா (மானிப்பாய் மகளிர் கல்லூரி), க. நாகதவபாலசுப்பிரமணியம் (அராலி இந்துக்கல்லூரி), மூ. மங்களாம்பிகை மானிப்பாய் மகளிர் கல்லூரி), சு. சந்திராதேவி (மானிப்பாய் மகளிர் கல்லூரி) வெ. சரோஜினிதேவி (முருகமூர்த்தி வித்தியாசாலை அராலி).

**நாடகம்**

அர்ச். கெஸ்றிக்கப்பர் கல்லூரி இளவாலை, மாதகல் அர்ச். சூசையப்பர் கல்லூரி, இளவாலை கன்னியர் மடம் ஆங்கிலபாடசாலை.

**குழுப்பாட்டு**

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, இளவாலை கன்னியர் மடம் ஆ. பாடசாலை, அர்ச். அன்னம்மாள் பாடசாலை மானிப்பாய்.

**சம்பாஷணை**

சென். தொமஸ் றோ. க. பாடசாலை மாதகல், மானிப்பாய் மகளிர் கல்லூரி, நவாலி மகா வித்தியாலயம்.

**கயரோகப் பிரசாரப் படை அணிநடை**

சில்லாலை றோ. க. பெண் பாடசாலை, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, இளவாலை திருக்குடும்பக் கன்னியர் மடம்.

அறிவு எழுத்துப்பரீட்சை: மேரி டொமிற் றில்டா யேஞஸ் (சில்லாலை மாதர் முன்னேற்றச்சங்கம்), சோ. நிர்மலேஸ்வரன் (நவாலிமுருகானந்த ச. ச நிலையம்,) ஜெயேசுதாசன் (நவாலி வாலிப கிறிஸ்தவசங்கம்), இரத்தினசிங்கம் மதியாபரணம் (கலாவல்லி ஐக்கிய நெசவு சங்கம் வடலியடைப்பு)

கட்டுரை- கோமதி கந்தையா (தொல்புரம் மத்திய ச. ச. நி.), பே. தவராணி (மா. மு ச. சங்கானை), கந்தையா கந்தமலர் (மத்திய ச. ச. நி. தொல்புரம்).

நாடகம்- நவாலி வாலிப கிறிஸ்தவ சங்கம், சில்லாலை இளைஞர் கழகம், நவாலி முருகானந்த சனசமூக நிலையம்.

குழுப்பாட்டு- நவாலி இளைஞர் கிறிஸ்தவ சங்கம், கலைமகள் கலைக்குழு வட்டுக் கோட்டை, இளைஞர் கழகம் சில்லாலை.

சம்பாஷணை-

நவாலி இளைஞர் கிறிஸ்தவ சங்கம், கலைமகள்கலைக் குழு வட்டுக்கோட்டை, இளைஞர் கழகம் சில்லாலை.

கயரோகப் பிரசார அணி நடை-

நவாலி இளைஞர் கிறிஸ்தவ சங்கம், அதி கூடிய புள்ளிகளைப் பெற்று நவாலி வாலிப கிறிஸ்தவ சங்கம் முனீர்ஸ் வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. ......

## பாராட்டு

யாழ்ப்பாணம், வியா

யாழ்ப்பாண ஐக்கிய லாப நிதி அதிபரும் சிறுப்பருமாகிய திரு. கனகசபை கயிலைநாதன் சமாதான நீதிபதியாக நியமிக்கப்பட்டதைப் பாராட்டுமுகமாக இம் மாதம் 6ந் தேதி மாலை 5 மணியளவில் யாழ். மாநகர சபை மண்டபத்தில் பாராட்டுவிழா ஒன்று நடைபெறவுள்ளது.

மங்கள இசையுடன் ஆரம்பமாகும் இவ்விழாவில் உதவி அரசாங்க அதிபர் திரு. த. முருகேசம்பிள்ளை, திரு. ச. அம்பிகைபாகன், நியாயதுரந்தரர் எஸ். ஆர். கனகநாயகம் உதவி மேயர் திரு. துரைராசசிங்கம் உட்பட பலர் பேசுவர். கவிஞர் இ. நாகராஜன் வாழ்த்துப்பா வழங்குவார். அரியாலை ஸ்ரீ கலைமகள் நாடகமன்றத்தினரின் 'ஸ்ரீ வள்ளி கல்யாணம்' என்ற நாடகமும் இடம்பெறும்.



—பட விமர்சனம்—

# உயிரா மானமா?

—சிந்தனைச் செல்வன்—

"சமாளி......
சவாலே சமாளி"

நீதி, நேர்மை, நியாயம் ஆக மூன்றின் மொத்த உருவமான வக்கீலுக்கும், அக்கிரமத்தின் வாரிசான நாகப்பனுக்கும் மோதலை ஏற்படுத்தி படத்தை எடுத்திருக்கிறார் கோபாலகிருஷ்ணன்.

ஆரம்பம்முதல் முடியும் வரை விறுவிறுப்பாகஇருக்கும் 'உயிரா மானமா' படத்தில் ஜெய்சங்கரின் துடுக்கான நடிப்பும், அலேக் விஜயநிர்மலாவின் நடிப்பும் நம்மனதைக் கவர்கின்றன.

நாகப்பனாகவரும் நம்பியார், பணத்திலே புரள எண்ணி தன் தம்பிக்கு சேர வேண்டியசொத்தைகொடுக்காமல்விட சட்டத்தை நாடுகிறார். அதன் முடிவு...

சோவியத் ரஷ்யாவுக்கும்- இந்தியாவுக்குமிடையில் முத்துராமன் - கிருஷ்ணகுமாரி மூலம் தொடர்பை ஏற்படுத்தி, ராமாயணத்தையும், மகாபாரதத்தையும் அவர்களிடையே உலவவிட்டு 'பாட்டாளிக்கு நாங்கள் கொடுக்கும் மதிப்பை, பணத்துக்குக் கொடுப்பதில்லை. பணக்காரன் மனைவி என்ற அந்தஸ்தில் நான் வாழ்வதிலும் பார்க்க பாட்டாளியின் மனைவி என்ற அந்தஸ்தில் வாழ்வதையே விரும்புகிறேன்' என்ற வார்த்தையோடு படத்தைமுடித்திருக்கிறார் கே. எஸ். கோபாலகிருஷ்ணன்.

வக்கீலாகவரும் டி. கே. பகவதியும், அவரின் தம்பியாகவரும் ஜெய்சங்கரும், மற்றும் எஸ் வரலட்சுமி, அலேக் விஜயநிர்மலா ஆகியோரும் சிறப்பாக நடித்திருக்கும் 'உயிரா மானமா' படத்தில் ஜெய்சங்கர், முதன் முறையாக நம்பியாருடன் சண்டைபோடுகிறார்.

முரடனாகவரும் ஜெய்சங்கரும், அவர் காதலியாக வரும், 'அலேக் விஜயநிர்மலாவும், நம்மை அதிகநேரம் சிரிக்கவைத்து இடைநடுவில் அழவைத்து விடுகிறார்கள்.

"அண்ணன்விரும்புவதைத் தான் தம்பிக்குக் கொடுக்கலாம்" என்று உயிலின் வாசகம் கூறுவதாக நம்பியாரின் வக்கீல் ஓ. ஏ. கே. தேவர் வாதாடும் போது, பகவதி குறுக்கிட்டு, நம்பியாரிடம் கேள்விகளைக் கேட்டுவிட்டு நீதிபதியை நோக்கி "அண்ணன் எல்லாவற்றையும் தான் விரும்புகிறார் அவையெல்லாம் தம்பிக்குத்தான் சேரவேண்டும்" என்று கூறும் போது, தியேட்டரே அதிர்கிறது.

நம்பியாரின் தம்பியாக வரும் முத்துராமன் அமைதியாக நடித்திருக்கிறார்.

நாகேஸுக்கு படத்தில் அதிகம் வேலையில்லாதபோதும், இடைக்கிடை வந்து நம்மை சிரிக்கவைக்கிறார்.

இரட்டை அர்த்தத்தில் அமைந்திருக்கும் "சவாலே சமாளி" பாடலை ஜெய்சங்கரும், விஜயநிர்மலாவும் பாடும்போது "எலந்தப் பழம்" பாடல் நினைவு வருகிறது.

"சவாலே சமாளி', பாடலும், 'குற்றால மலையிலே', 'ஆத்திரத்தில் துடுப்பெடுத்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

7-30 இரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 ... 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன் 61 மீ

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 தொழிலாளர்கேட்டவை, 1-00கதம்ப இசை, 1-30 செய்திச் சுருக்கம்.

344 மீ அன் 49 மீ

மாலை 4-25 செய்திச் சுருக்கம், 4-28 ஆங்கில வகுப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தின வாழ்த்துக்கள், 5 15 நாளைய சந்ததி, 5-45 படத்தி லிருந்து.

குதூகல மிகுதி.

மீனம்- சிந்தனை மிகுதி, சகோதர சஞ்சலம்.

— சோதிடக்கலாநிதி —

திருமலை வேலுப்பிள்ளை

இரவு 6-15 வயலினிசை, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7 03 கர்னாடகஇசை, 7-35முத்திநெறி, 8-00செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 வாத்திய இசை, 9-30 பேச்சு, 9-40 கதாப்பிரசங்கம், 10-30 செய்திச்சுருக்கம்.

வரா), கா. ஜெயகுமார் தெல்லிப்பழை சைவப்பிர ... (இளவாலை மெய்கண்டான்) மேற்பிரிவு ஆண்கள்: ந. கிருஷ்ணமூர்த்தி (பன்னாலை சேர் கனகசபை), பொ. யோகேஸ்வரன் (இளவாலை மெய்கண்டான்), சி. சிவபாலன் (இளவாலை மெய்கண்டான்)மேற்பிரிவு பெண்கள்: க. சரஸ்வதியம்மா (நகுலேஸ்வரா கீரிமலை, சி. சரோஜினி (நகுலேஸ்வரா கீரிமலை), செ. கிறேஸ் (மாதால் சென் தோமஸ்)

400 மீற்றர் ஓட்டம்: மேற்பிரிவு ஆண்கள்: ந. கிருஷ்ணமூர்த்தி (சேர் கனகசபை பன்னாலை), மு. தவயோகராசா (மல்லாகம் அமெரிக்கன்மிஷன்)

சைக்கிள் ஓட்டம்: மேற்பிரிவு ஆண்கள்: சி. சிவஞானம் (மாதகல் சென் தோமஸ்) ச. விக்கினேஸ்வரன் (அ. மி. பா. மல்லாகம்)

திரு. வி. சதாசிவமும் அவரது பாரியாரும் இவ்விழா வில் ... விருந்தினராகக் கலந்து பரிசில்கள் வழங்குவர்.

திருக்குடும்பக் கன்னியர் மடம்.

அறிவு எமக்குப்பரீட்சை: மேரி டொமிற்றில்டா யேனுஸ் (சில்லாலை மாதர்

வாழ்த்துப்பா வழங்குவார். அரியாலை ஸ்ரீ கலைமகள் நாடகமன்றத்தினரின் 'ஸ்ரீ வள்ளி கல்யாணம்' என்ற நாடகமும் இடம்பெறும்.

திருக்கிறார் கே. எஸ். கோபாலகிருஷ்ணன்.

... வக்கீலாகவரும் டி. கே. பகவதியும், அவரின் தம்பி

சமாளி'' பாடலை ஜெய்சங்கரும், விஜயநிர்மலாவும் பாடும்போது ''எலந்தப் பழம்'' பாடல் நினைவு வருகிறது.

''சவாலே சமாளி', பாடலும், 'குற்றால மலையிலே', 'ஆத்திரத்தில் துடுப்பெடுத்தாய்' பாடல்களும் நினைவில் நிற்கின்றன.

''உயிரா மானமா'' இப்போது ராணி தியேட்டரில் ஓடிக்கொண்டிருக்கிறது குடும்பத்துடன் சென்று பார்க்கலாம்.


ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]

ஜெய்சங்கர்
வரலக்ஷ்மி
நடித்த

# உயிரா மானமா



5-வது வெற்றி வாரமாக
காட்சியளிக்கின்றது

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

மற்றும் சில சினிமாஸ் திரைகளில்

ரவிச்சந்திரன் - காஞ்சனா - நாகேஷ்
அசோகன் - கீதாஞ்சலி
நடித்த

# அதே கண்கள்

நாளைமுதல்

இங்ஸ்லி (கொழும்பு) வெம்பிளி (கண்டி)

ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை) விஜயா (மட்டுநகர்)

மற்றும் சில சினிமாஸ் திரைகளில்
காண்பிக்கப்படுகின்றது

(ஜேம்ஸ்பொண்ட்) ஜெய்சங்கர் - (ஆடலழகி) ஜெயலலிதா
நாகேஷ் - மனோரமா - சோ
குமாரி சச்சு சுந்தரராஜன்
நடித்து

வி ஸ்ரீநிவாசனின் டைரக்ஷனில்
உருவாகி வெளிவந்துள்ள
மகோன்னத சித்திரம்

# பொம்மலாட்டம்

திரைக்கதை வசனம் சோ.
இசையமைப்பு வி. குமார்



ராஜா 143வது தினம்
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
நடித்த
ஒளிவிளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)
மாதர்களுக்குஅரைக்கட்டணம்



வல்வெட்டித்துறை
ரஞ்சனா தியேட்டர்
ஜெய்சங்கர் - விஜயா
நடித்த
பெண்ணே
நீ வாழ்க



வெஸ்லி சினிமா
(மானிப்பாய்)
தினசரி6-30, இரவு10-00
பிரிபோயா, போயா 10-30மணி
எம். ஜி. ஆர். - சாவித்திரி
நடித்த
பரிசு



MANOHARA
JAFFNA
Daily 4-45, 7 & 9-45P.M.
Rod steiger, Lee Remmick
in
NO WAY TO TREAT
A LADY
(Techni Color)
[Academy Award Winner



REGAL JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m
Pre-Pova, Poya 4 Shows
HUGH O' BRAIN
in
Assassination ni
Rome
(Cinemascope Color)



# யாழ். வின்ஸர் வெண்திரையில்

## இன்று வியாழன் முதல்
## குதூகல ஆரம்பம்

### தினசரி 4 காட்சிகள்

★ நடிகர் திலகம்
சிவாஜி கணேசன்
★ எம். என். நம்பியார்
★ நாகேஷ்
★ சிவகுமார்
★ நாட்டியப் பேரொளி
பத்மினி
★ கே. ஆர் விஜயா



★ சௌகார் ஜானகி ★ ராஜ சுலோசனா ★ பேபி பத்மினி
★ மாஸ்டர் பிரபாகரன் ★ மனோரமா

நடித்த

# திருமால் பெருமை

[முழு நீள ஈஸ்ட்மன் கலர்]

கதை — வசனம் — டைரக்ஷன்:
A. P. நாகராஜன்

பாடல்கள்:
கவிஞர் கண்ணதாசன்

இசையமைப்பு:
K. V. மகதேவன்


அளவெட்டி கி. மு. ச

## அதிர்ஷ்ட சீட்டிழுப்பு முடிவுகள்

யாழ்ப்பாணம், வியாழன்

இம்மாதம் முதலாம் திகதி நடைபெற்ற அளவெட்டி கும்பளாவளை பூங்காவனத் திருவிழாவின்போது அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட அதிர்ஷ்டச் சீட்டிழுப்பின் முடிவுகள் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1-வது பரிசு | இல. | 1094 |
| 2- ,, | ,, | 1629 |
| 3- ,, | ,, | 766 |
| 4- ,, | ,, | 1017 |
| 5- ,, | ,, | 1472 |
| 6- ,, | ,, | 1365 |
| 7- ,, | ,, | 467 |
| 8- ,, | ,, | 703 |
| 9- ,, | ,, | 941 |
| 10- ,, | ,, | 1670 |
| 11- ,, | ,, | 793 |
| 12- ,, | ,, | 1753 |

## நடவடிக்கை

கோட்டை, புதன்

வெள்ளத்தினால் ஏற்படும் அபாயத்தை முன்னதாகவே தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

வெள்ளத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்ட பகுதிகளை படம்பிடித்து ஆராயப்படவுள்ளது. நிலவளவைப் பகுதியினர் படம் பிடித்து ஆராய்வர்.


அன்பு வெளியீடு
வழிகாட்டியை மட்டு மடக்கி ஆக்கப்பட்டதும்; உரிய விளக்கப்படங்கள் கொண்டதும், புதுமுறை வினாக்களடங்கியதும், ஆய........
ஆறுந்தரப் புவியியல்
எழுதியவர்: க. குணராஜா
பி ஏ. (Hons)
மீள்பார்வை:
வே. க. கந்தசாமி
(புதுமைலோலன்)
விலை ரூ. 3-90 வி. பி. கவனிக்கப்படும்.
விற்பனையாளர்:
அன்பு புத்தகசாலை
27 D, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
ஸ்ரீலங்கா புத்தகசாலை
234, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆந்திர நகரங்களில் தீவைப்பு; கொள்ளை; கல்வீச்சு சம்பவங்கள்

## ஓரேநாளில் 13 இடங்களில் பொலிஸ் சுட்டதில் 6 பேர் பலி

### தெலிங்கானு கிளர்ச்சி தீவிரம்;

### இரு நகரங்களில் ஊரடங்கு உத்தரவு

ஹைதராபாத், ஜூன் 4

தனித் தெலிங்கானு ராஜ்யம் அமைக்கக்கோரி ஆந்திராவில் நடைபெற்று வரும் கிளர்ச்சி நேற்று உச்சக் கட்டத்தை அடைந்தது. நிலைமையை கட்டுப்படுத்துவதற்கு பொலிசார் நேற்றுப் பதின்மூன்று இடங்களில் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இத்துப்பாக்கிப்பிரயோகத்தில் ஆறு பேர் கொல்லப்பட்டனர். பொலிசார் உட்பட 42 பேர் காயமடைந்தனர். துப்பாக்கிப் பிரயோகத்தில் மாண்டவர் தொகையும் காயமடைந்தவர் தொகையும் அதிகமாக இருக்கலாமென தனித் தெலிங்கானு ராஜ்யம் கோரும் தெலிங்கானு பிரஜா சமிதி தலைவர்கள் தெரிவித்தனர். ஹைதராபாத், செக்கந்திராபாத், வாரங்கல் மற்றும் பல இடங்களிலும் கொள்ளை, தீவைப்பு போன்ற செயல்களும் கல்வீச்சுக்களும் நடைபெற்றன. நேற்று மட்டும் 80 இடங்களில் தீ வைப்புச் சம்பவங்கள் இடம்பெற்றன. அரசாங்கக் கட்டிடங்கள், பாடசாலைகள், வீடுகள், கடைகள் ஆகியவை தீவைக்கப்பட்டன.

தீயணைப்பு வண்டிகள் செல்வதற்கும் கிளர்ச்சிக்காரர்கள் சாலைகளில் தடைகள் வைத்துத் தடுத்தனர். தீயணைப்பு வண்டிகள்மீதும் அவர்கள் கற்களை வீசித் தாக்கினர்.

நிலைமை மிக மோசமானதைத் தொடர்ந்து வாரங்கலில் நேற்று மாலை 6 மணி முதல் 24 மணிநேரத்துக்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஹைதராபாத்திலும் நேற்றிரவு 10 மணி முதல் ஏழு மணி நேர ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

ஹைதராபாத்திலும் சுற்றுப்புறங்களிலும் ரயில் சேவைகளும் பாதிக்கப்பட்டன. ரயில் பாதைகளிலுள்ள சிலிப்பர் கட்டைகளுக்கும் கிளர்ச்சிக்காரர் தீ வைத்தனர். கைகாட்டி மரங்கள் மற்றும் தந்திக்கம்பங்களையும் சேதப்படுத்தினர்.

ஹைதராபாத்திலும் செக்கந்திராபாத்திலும் நேற்று ஆரம்பமான பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்குப் பாதுகாப்பளிக்க இராணுவம் அழைக்கப்பட்டிருந்தது. ஐம்பது விகிதமானவர் பரீட்சை எழுதியதாக ஆந்திர பிரதேச கல்விஅமைச்சர் திரு பி. வி. நரசிம்மராவ் தெரிவித்தார்.

பரீட்சையை ரத்துச் செய்யாவிட்டால் ஹர்த்தாலை நீடிக்கப் போவதாக தெலிங்கானு பிரஜாசமிதி தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கி, கத்தி, டொல்லு முதலிய ஆயுதங்களை எவரும் வைத்திருக்கக்கூடாதென்றும் கற்களைக் குவித்து வைத்திருக்கக் கூடாதென்றும் கடுமையான உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.


## "தனித்தெலிங்கானு ராஜ்யம் என்ற பேச்சுக்கே இடமில்லை"

### பிரதமர் இந்திரா உறுதி

புதுடில்லி, ஜூன் 4

தெலிங்கானு தனிராஜ்யக் கோரிக்கை சம்பந்தமாக ஆந்திராவில் நடைபெறும் சம்பவங்களைத் தொடர்ந்து பிரதமர் திருமதி இந்திரா காந்தியைச் சந்தித்துஆலோசனை நடத்துவதற்காக நேற்றுப் பிற்பகல் புதுடில்லி ... தெனப் பிரதமர் தெரிவித்தார்.

தெலிங்கானு மக்களின் குறைகளை நிவர்த்திசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வரும் இச்சமயத்தில் வன்முறைச் செயல்களில் ஈடுபட்டு உயிர்ச்சேதம் விளைப்பது துரதிர்ஷ்டமான தென்று பிரதமர் தெரிவித் ...



யாழ்ப்பாணம் நாகவிகாரை பிரதம குரு கடவத்தை நந்தராமநாயக்க தேரோ அல்வாய் பௌத்த பாடசாலை மாணவர்களுக்கு 'பன்ஸில்' சொல்லிக் கொடுக்கிறார். பொறுப்பேற்பு வைபவத்தின் போது எடுக்கப்பட்ட படம்.

படப்பிடிப்பு: ஏ. வி. எம்.

### 'மைசூர்', 'ராணு' மோதல்

புதுடில்லி, ஜூன். 4

'மைசூர்', 'ராணு' என்ற இரு இந்திய கடற்படைக் கப்பல்கள் அராபிக்கடலில் ஒத்திகையில் ஈடுபட்டிருந்த சமயத்தில்மோதிக் கொண்டன. இதனால் இரு கப்பல்களுக்கும் சிறிது சேதமேற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 'ராணு' கப்பலில் 3 பேரைக் காணவில்லையெனவும் அவர்களை விமானங்களும் கப்பல்களும் தேடி வருவதாகவும் தெரிகிறது.

——

### சாதிக்-இந்திரா பேச்சு

புதுடில்லி, ஜூன் 4

காஷ்மீர் முதன் மந்திரி திரு. ஜி எம். சாதிக் நேற்று புதுடில்லியில் பிரதமர் திருமதி இந்திராகாந்தியைச் சந்தித்துப் பேசினார். இச் சந்திப்பில் உள்துறை அமைச்சர் திரு. சவானும் கலந்துகொண்டார்.

——

### மாணவர் ஆர்ப்பாட்டம்

### கிரகங்களில் உயிர்கள் வாழுகின்றன

வாஷிங்டன், ஜூன் 4

மற்றக் கிரகங்களில் உயிர்கள் இருக்கக்கூடும் ...

### "சைவர்கள் சைவராகவாழ சமூகப் பாகுபாடு நீங்கவேண்டும்"

சுழிபுரம், புதன்

'சைவசமயத்திற் பிறந்தவர்கள் சிலர் முன்னுளில் கிறிஸ்தவர்களானார்கள் பாதிரிமாரின் உதவியுடன் அவ்வப்போதிருந்த அந்நிய ராட்சியினர் சமயம் மாற்றும் வேலையை மறைமுகமாகச் செய்து வந்தனர். ஆனால் இன்று சுதந்திர இலங்கையில் கல்வியமைச்சு சைவத் தமிழ் மக்களைப் பௌத்த சிங்கள மக்களாக மாற்றுவதற்கு திட்டமிட்டு வெளிப்படையாக நடவடிக்கை எடுக்கிறது, தமக்கு மூக்குப்போனாலும் எதிரிக்குச் சகுனப்பிழையாகவேண்டும் என்று, விரக்தியுற்ற சிறுபான்மைத் தமிழர்தமது அருமையான சைவ சமயத்தையும் தமிழினத்தையும் விட்டுப் பௌத்தராய்ச்-சிங்களவராய் மாற முனைகிறார்கள். சமயம் மாற்றும் வேலையில் முன்னுள் பாதிரிமாரிலும் பார்க்க இந்நாள் கல்வியமைச்சு மிகவும் மோசமானது.'

இவ்வாறு பண்ணாகம்மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் மாணவர் மன்றத்தி... னர். இந்தநிலையிலே நாம் பழம் பெருமை பேசுவதை விட்டு, நமது இனத்தையும் சமயத்தையும் பிரிக்கும்சூழ்ச்சிக்கு இடங்கொடுக்காது கட்டுக்கோப்பாக ஒருமித்து நின்று உரிமையுடைய மக்களாய் வாழவேண்டும்' என்றார்.

——

### குருபூசை

சித்தன்கேணி, புதன்

"நாம் பிறவி எடுப்பதன் உண்மை நோக்கம் பேரின்பமடைதலே. அந்நிலையை அடைய வாழவேண்டிய வகைகளை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். எம்முடைய நாயன்மார்கள் அந்தவகையில் வாழ்ந்தார்கள். அவர்கள் வாழ்க்கை நமக்கு வழிகாட்டுவனவாக அமையும். எனவே அப்பெருந்தகையாளர்களது தினத்தை நாம் கொண்டாடுவது நமக்கேநாம் ஆக்கத்தை தேடுவதாகும்" என்று பிளவத்தை அமெரிக்கன் மிஷன் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற சம்பந்தர் குருபூசையின்போது பேசிய ...

# செய்திச் சுருக்கம்

### வேலை தேடுபவர்கள்

கோட்டை, புதன்

இந்தவருடம் பெப்ரவரி மாதத்தில் 284,000 பேர் வேலை தேடி தமது பெயர்களைத் தொழில் கந்தோர்களில் பதிவு செய்திருந்தார்கள். ஜனவரியில் 281,194 பேர் வேலை தேடி பதிவு செய்திருந்தார்கள்.

இவர்களில் பெப்ரவரி மாதத்தில் பதிவு செய்திருந்த பெண்கள் தொகை 66,289 பேர் ஜனவரியில் 65,504.

0 0 0

### பிச்சைக்காரர் பற்றி விசாரணை

கோட்டை, புதன்

சிறுவர்கள் பிச்சை எடுப்பது சம்பந்தமாக விசாரணை செய்வதற்கு சமூக சேவைகள் அமைச்சு ஒரு விசாரணைக் குழுவை நியமித்துள்ளது.

இது பற்றிய விசாரணை செய்வது அவசியமாகியுள்ளது என அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. டி. ரி. ஈ. ஓ டி. பொன்சேகா தெரிவித்துள்ளார்.

0 0 0

### 1971-ல் சுயதேவை பூர்த்தி

கோட்டை, புதன்

1971-ம் வருட இறுதியில் சீமெந்து உற்பத்தியில் நாடு தன் நிறைவுகாணும் என உற்பத்தி கூட்டுத்தாபன அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

காங்கேசன்துறை தொழிற்சாலை 1970-ம் வருடத்தில் 270,000 தொன் சீமெந்தை உற்பத்தி செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது.

0 0 0

### பிரதேசவாரியான கோரிக்கை

வேருவளை, புதன்

வேருவளை ஆட்சிமன்ற அங்கத்தவர் ஜனுப்பகீர் மார்க்கர் தலைமையிலான அரசாங்கத்தைச் சார்ந்த ஆட்சிமன்ற அங்கத்தவர் சிலரைக் கொண்ட குழுவொன்று அரசாங்க இலாகாக்களிலும் கூட்டுத்தாபனங்களிலும் நியமனம் பெறும் தற்காலிக ஊழியர்களை பிரதேசவாரியாகத் தெரிவு செய்யுமாறு அரசாங்கத்தைக் கோரியுள்ளது. பிரதேசவாரியாக நியமனங்கள் செய்யப்படின் நியமனங்கள் சம்பந்தமாக ஏற்படும் கஷ்டங்கள் ஏற்படாதென இக் குழு தெரிவித்துள்ளது

0 0 0

### பஸ் நிலையத்தில் மூவருக்கு கத்திக்குத்து

கோட்டை, புதன்

பஸ் நிலையத்தில் நின்ற ஒரு இளம் பெண்ணுடன் வலியக் கதைக்க முயன்றார் ஒரு வாலிபர். இதைக்கண்ட கணவர் வாலிபரை அதட்டிப் பேசினார் உடனே மனைவிக்கும் கணவனுக்கும் அங்குநின்ற ஒருவருக்கும் விழுந்தது கத்திக்குத்து. இச் சம்பவம் கொழும்பு ஒல்கொட் மாவத்தையில் ஹோமகம பஸ்தரிப்பு நிலையத்தில் நடைபெற்றது.

இது சம்பந்தமாக புறக்கோட்டையைச் சேர்ந்தஒரு வாலிபர் கைது செய்யப்பட்டு நீதிபதிமுன் ஆஜர் செய்யப்பட்டார். ரூபா 3000 பிணையில் செல்லஅனுமதித்த நீதிபதி வேறு திகதிக்கு ஆஜராகும்படி உத்தரவிட்டார்.

——

### 2-வது ஆண்டு விழா

சித்தன்கேணி, வியா.

நவாலி பாரதி சன சமூக நிலையத்தின் இரண்டாவது ஆண்டு விழாவும், விளையாட்டு போட்டியும் இன்று நடைபெறுகிறது. இதில் மரதன், சைக்கிள் ஓட்டப் போட்டியும் மற்றும் பல நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன. இந்நிகழ்ச்சிகளுக்கு நவாலி கிராம சேவையாளர் தலைமைவகிப்பார்.

செலுத்தியுள்ளதாலயே மீண்டும் இவ்வித கடன் வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

1970-ம் வருடம் நாட்டின் உணவு சுய தேவைப் பூர்த்தியில் 75 வீத குறியளவை எட்ட சகல நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருவதும் இவ்வித கடன் வழங்கப்படுவதற்கு ஒரு காரணம் என்பது குறிப்பிடத்தக்கது.

0 0 0

### மனநோயாளர் கொலை

களுத்துறை, புதன்

பெலவத்தை மனநோய் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவந்த ரேமியல் சிங்கோ என்பவர் கொலை செய்யப்பட்டது சம்பந்தமான வழக்கு களுத்துறை மாஜிஸ்திரேட் திரு. சி. ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெலிங்கானு தனிராஜ்யக் கோரிக்கை சம்பந்தமாக ஆந்திராவில் நடைபெறும் சம்பவங்களைத் தொடர்ந்து பிரதமர் திருமதி இந்திரா காந்தியைச் சந்தித்து ஆலோசனை நடத்துவதற்காக நேற்றுப் பிற்பகல் புதுடில்லி வந்து சேர்ந்த ஆந்திர ராஜ்ய முதலமைச்சர் திரு. பிருமானந்த ரெட்டி நேற்று மாலை பிரதமரைச் சந்தித்து ஒருமணிநேரம் பேசினர். இன்று காலையும் அவர் பிரதமருடன் ஆலோசனை நடத்தினர்.

ஆந்திராவில் நடைபெறும் சம்பவங்கள் குறித்து பிரதமர் இந்திரா தமது கவலையைத் தெரிவித்துக் கொண்டார். ஆந்திராவின் ஒருபகுதி சமீபத்தில் வீசிய சூறுவளியினுல் பாதிக்கப்பட்டு மக்கள் கஷ்டமடைந்துள்ள இச் சமயத்தில் தனிராஜ்ய கோரிக்கை மீது வன்முறைச் செயல்கள் நடை பெறுவது வேதனையளிக்கிற தென்றும் தெரிவித்தார்.

தெலிங்கானு மக்களின் குறைகளை நிவர்த்திசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வரும் இச்சமயத்தில் வன்முறைச் செயல்களில் ஈடுபட்டு உயிர்ச்சேதம் விளைப்பது துரதிர்ஷ்டமானதென்றும் பிரதமர் தெரிவித்தார்.

தனித்தெலிங்கானு ராஜ்யம் என்ற பேச்சுக்கே இடமில்லையென்றும் வன்முறைச் செயலுக்குப்பணிந்து கொடுக்க முடியாதென்றும் பிரதமர் உறுதியுடன் தெரிவித்ததாக அறியப்படுகிறது.

ஆந்திர முதன் மந்திரி திரு. பிரும்மானந்தரெட்டி பிரதமரைச் சந்திக்க புதுடில்லி வந்துள்ள அதேசமயம் பிரதமரைச் சந்திப்பதற்காக தனித் தெலிங்கானு ராஜ்யம் கோரும் தெலிங்கானு பிரஜா சமிதித்தலைவரும் புதுடில்லி வந்து சேர்ந்துள்ளார்.

# ஹரிஜன நலனுக்கு ரூ. 4 கோடி 36லட்சம்

## தமிழக அரசு இவ்வருடம் செலவிடும்

உதகமண்டலம், ஜுன் 4

தமிழ்நாட்டில் ஹரிஜனர் நலனுக்கென இவ்வருடத்தில் நான்கு கோடி 36 லட்சம் ரூபாய் செலவிட தமிழ்நாடு அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. சமூக நல சேவைக்கென ஒதுக்கப்பட்ட ஏழு கோடி ரூபாயில் நான்கு கோடி 36 லட்சம்ரூபாய் ஹரிஜனர் நலனுக்குச்செலவிடப்படு மென்று தமிழ் நாடு ஹரிஜன நல சமுதாய நல அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து தெரிவித்தார்.

தமிழ்நாடு ஹரிஜன நல ஆலோசனைக்குழுக் கூட்டத்தை உதக மண்டலத்தில் நேற்று ஆரம்பித்துவைத்து திருமதி சத்தியவாணிமுத்து பேசினர்.

வகுப்புபேதமற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்றும் வகுப்புப்பேதத்தை ஒழிப்பதற்கு கலப்புத் திருமணமே சிறந்த வழியென்றும் கலப்புத் திருமணத்துக்கு ஊக்கமளிப்பதற்காக தமிழ் நாடு அரசாங்கம் தன்னுலானதெல்லாவற்றையும் செய்யுமென்றும் இந்தவகையில் கலப்புத்திருமணம் செய்வோருக்கு தங்கப்பதக்கம் பரிசளித்துவருகிறதென்றும் அமைச்சர் சத்தியவாணி முத்து கூறினுர்.

## உயிர்ப்பிச்சை அளிக்க கோரிக்கை

அடிஸ்அபாபா, ஜுன் 4

பியாப்ராவுக்கு எதிராக நைஜீரிய சமஷ்டித் துருப்புக்களுடன் சேர்ந்து சண்டையிட்டதாகக் குற்றம்சாட்டி பியாப்ராவில் உள்ள வெளிநாட்டு எண்ணெய்க் கம்பனியைச் சேர்ந்த 18 வெளிநாட்டு எண்ணெய்த் தொழிலாளருக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை ரத்துச்செய்து அவர்களுக்கு உயிர்ப்பிச்சை அளிக்குமாறு எதியோப்பிய மன்னர் ஹெய்லி செலாஸி பியாப்ரா தலைவரைக் கோரியுள்ளார்.

18 தொழிலாளருக்கும் விதிக்கப்பட்ட மரணதண்டனையை ரத்துச்செய்யுமாறு இத்தாலி, மேற்கு ஜெர்மனி ஆகிய நாடுகளும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் வேண்டுகோள் விடுத்துள்ளன.

## தலைவர் கைது

புவனஸ்அயர்ஸ், ஜுன் 4

ஆர்ஜன்டைனுவில் பிரபல தொழிற்சங்கத்தின் தலைவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டார். அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு சதிசெய்ததாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

## இரகங்களில் உயிர்கள் வாழுகின்றன

வாஷிங்டன், ஜுன் 4

மற்றக் கிரகங்களில் உயிர்கள் இருக்கக்கூடும் என்ற நம்பிக்கையை அப்போலோ-10 விண்வெளி வீரர் கொண்டு வந்த தகவல்கள் அதிகரிப்பதாக அமெரிக்க விண்வெளி விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். பூமியில் மட்டும் தான் உயிர்கள் வாழவில்லையென்றும் இதர கிரகங்களிலும் உயிர்கள் வாழுகின்றன என்ற நம்பிக்கையை உறுதிப்படுத்தும் தகவல்கள் கிடைத்திருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

## சிங்கையில் இராணுவம் அழைக்கப்பட்டது

சிங்கப்பூர், ஜுன் 4

சிங்கப்பூரில் மலாயர்களுக்கும்சீனர்களுக்குமிடையில் கைகலப்பு ஏற்பட்ட பகுதிகளில் மீண்டும்மோதல் ஏற்பட்டு நெருக்கடி தோன்றியதைத் தொடர்ந்து நிலைமையைச் சமாளிப்பதற்கு இராணுவம் அழைக்கப்பட்டது

இனக்கலசத்தில் சென்ற 24 மணிநேரத்தில் மேலும் இருவர் மாண்டதாகவும் இதுவரை நால்வர் வகுப்புக்கலகத்தில் பலியானதாகவும் உத்தியோகரீதியான தகவல் தெரிவிக்கிறது. ஆனுல் கலகத்தில் மாண்டவர் தொகை ஏழு என்றும் காயமடைந்தோரின் எண்ணிக்கையும் அதிகமென்றும் உத்தியோகப் பற்றற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

## நாவலர் முத்திரை

கோட்டை, புதன்

ஆறுமுகநாவலர் ஞாபக முத்திரை வெளியிடுவது பற்றி பரிசீலனை செய்வதற்காக ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் புகைப்படம் ஒன்றை அனுப்பி வைக்குமாறு அரசாங்க முத்திரை வெளியீட்டுப்பகுதிநாவலர் சபையைக் கேட்டுள்ளது.

இம்மாதம் 24-ம் திகதி யாழ்ப்பாணத்தில் நிறுவப்படவுள்ள நாவலர்சிலையை படம்பிடித்து முத்திரை வெளியிடுவதற்காக அனுப்பி வைக்க ஆறுமுகநாவலர்சபை முடிவு செய்துள்ளதாக சபையின் செயலாளர் திரு. எம். ஸ்ரீகாந்தா தெரிவித்துள்ளார்.

யைச் சந்தித்துப் பேசினர். இச் சந்திப்பில் உள்துறை அமைச்சர் திரு. சவானும் கலந்துகொண்டார்.

## மாணவர் ஆர்ப்பாட்டம்

சண்டியாகோ, ஜுன் 4

சில்லியின் தலைநகரில் உள்ள அமெரிக்கத் தூதகத்தின் முன்னுல் ஆர்ப்பாட்டம் செய்த சுமார் நானூறு மாணவர்கள் வன்முறைச் செயலில் ஈடுபட்டதைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைப்பதற்குப் பொலிசார் தடியடிப்பிரயோகம் செய்தனர். ஏழுமாணவர் காயமடைந்தனர்.

## அண்ணு சிலை திறப்பு விழா

உடுப்பிட்டி, புதன்

காலஞ்சென்ற தமிழக முதல் அமைச்சர் அறிஞர் சி. என். அண்ணுதுரைக்குக் கரணவாய் தெற்கில் சிலை எழுப்பப்பட்டுள்ளது.

ஓவியர் திரு. சிவசம்புவினுல் சுமார் 5,000 ரூபா செலவில் உருவாக்கப்பட்டுள்ள இச்சிலையை எதிர்வரும் 7-ம் திகதி தென் கருணை வள்ளுவர் வாசிகசாலையினர் திறந்துவைக்கவிருக்கின்றனர்.

திரு. கி. தர்மரத்தினம் தலைமையில் நடைபெறும் சிலை திறப்பு விழாவில் மட்டக்களப்பு முதலாவது எம். பி திரு. செ. இராஜதுரை அண்ணு சிலையைத் திரை நீக்கம் செய்துவைப்பார். இத்திறப்பு விழாவில் உபசபாநாயகரும் உடுப்பிட்டி எம் பி.யுமான திரு. மு. சிவசிதம்பரம், பருத்தித்துறை எம். பி. திரு. க துரைரத்தினம், உடுப்பிட்டிக் கிராம சபைத் தலைவர் திரு. ஆர். ஆர். தர்மரத்தினம், பண்டிதர் வீ. பரந்தாமன், தி. மு. க. துணைச்செயலாளர் திரு. எ. உ. தேவராசன் (நெடுமாறன்) திரு. வி. பொன்னம்பலம் உட்பட சுமார் 17 பேச்சாளர்கள் சொற்பொழிவாற்றுவர்.

## காயமுற்றவர் ஆஸ்பத்திரியில்

சுழிபுரம், புதன்

சுழிபுரம் காளுவன் சந்திக்கு அருகே பருளை ரூேட்டில் இரு சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கிடையே நடைபெற்ற சச்சரவு அடிபிடியில் முடிந்தது. பலத்த காயங்களுக்குள்ளான சிலர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதுசம்பந்தமாக சங்கானைப் பொலிசார் விசாரணைமேற்கொண்டுள்ளனர்.

களவராய் மாற முனைகிறார்கள். சமயம் மாற்றும் வேலையில் முன்னுள் பாதிரிமாரிலும் பார்க்க இந்நாள் கல்வியமைச்சு மிகவும் மோசமானது.'

இவ்வாறு பண்ணுகம்மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் மாணவர் மன்றத்தினரால் நடாத்தப்பட்ட ஞானசம்பந்தர் குருபூசை விழாவில் பேசும்போது பண்டிதர் திரு ப. இராசகுரு கூறினுர்.

'இந்தநாட்டிலே சிறுபான்மையினத்தினராய் நசுங்கி உரிமைகள் பறிக்கப்பட்டுத் தாழ்வுற்று வாழும் சைவத்தமிழ் மக்களாகிய நாம், எமக்குள்ளேயே ஒரு பகுதியினரைத் தாழ்த்தப்பட்டவர்களாய் - உரிமையிழந்தவர்களாய் மனம் நொந்து வாழவிடுவது நீதியா' என்று கேட்டுக் கொண்ட பண்டிதர் இராசகுரு மேலும் பசுகையில் கூறியதாவது: 'சம்பந்தர், அப்பர், மாணிக்கவாசகர், ஆறுமுகநாவலர் போன்ற அருட்குரவர்கள் இன்று இருப்பாரேயானுல் இப்படி நடக்காது. சாதிக் கொடுமைகள் பிற்காலத்திலேயே தோன்றியவை. ஆசாரம், ஒழுக்கம் இவைகொண்டே உயர்ந்தோர் தோன்றினர். பிறப்பினுல் உயர்வு தாழ்வு இல்லை. இன்று தாழ்த்தப்பட்டவர்களென்றிருப்போரில் ஆசாரம், ஒழுக்கம், நீதியுடைய பலர் வாழ்கின்றனர். உயர்ந்த சாதிமான்களெனத் தங்களைச் சொல்லிக்கொள்ளுபவர்களிற்சிலர் அருவருப்பான ஒழுக்கமுடையவர்களாய் உள்ள

## பூநகரியில் ஜீ. ஜீ.

பூநகரி, புதன்

பூநகரிப் பகுதிக்கு தமிழ்க் காங்கிரஸ் தலைவரும் யாழ்ப்பாண எம். பியுமான திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அண்மையில் விஜயஞ்செய்து அடுத்த பொதுத்தேர்தலில் தமிழ்க்காங்கிரஸ் அபேட்சகராகப் போட்டியிட இருக்கும் வழக்கறிஞர் வி. ஆனந்தசங்கரியுடன் பூநகரிப்பகுதியிலுள்ள சகல கிராமங்கட்கும் சென்று அப்பகுதி மக்களது குறைகள்பற்றி உரையாடினுர்.

பகிரங்கப் பொதுக்கூட்டமொன்று பூநகரி வாடியடி மைதானத்தில்கிராமசபைத் தலைவர் திரு. வை. வல்லிபுரம் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம், வழக்கறிஞர் ஆனந்த சங்கரி, பொ. தர்மலிங்கம், செந்தில்நாதன், முன்னுள் கிராம தலைமைக்காரர் திரு. ச. வே. சபாரத்தினம் ஆகியோர் பேசினர்.

அமையும். எனவே அப் பெருந்தகையாளர்களது தினத்தை நாம் கொண்டாடுவது நமக்கேநாம் ஆக்கத்தை தேடுவதாகும்'' என்று பிளவத்தை அமெரிக்கன் மிஷன் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற சம்பந்தர் குருபூசையின்போது பேசிய பண்டிதர் திரு. சி. அப்புத்துரை கூறினுர்.

விசேட ஆராதனைகளுடன் தொடங்கிய அவ்விழாவில் செல்வன் க. கெங்காதரன், செல்வன் இ. ஜெயமோகன், செல்வன் ந. வரதராசன் ஆகியோரும் சம்பந்தரைப் பற்றி உரையாற்றினுர்கள். கூட்டுப் பிரார்த்தனையும் இடம்பெற்றது.

★

துணுக்காய், புதன்

வவனிக்குளம் சிவாலயத் திருப்பணிச்சபையினர் திருஞானசம்பந்தர் குருபூசை நடத்தினர். வவனிக்குளத் திட்டத்தின் இடதுகரை மக்களும், சிவபுர மக்களும் சேர்ந்து ஒழுங்குசெய்த இவ்விழாவுக்குத் துணுக்காய்க் காரியாதிகாரி திரு. மு. தம்பிமுத்து தலைமைவகித்தார். திருமதி தவமணிதேவி சபாநாதன், ஆசிரியர் கே. சோதிலிங்கம், திரு. அ. செல்லத்துரை ஆகியோரும் சம்பந்தர் பற்றிப் பேசினர்.

★

கோப்பாய், புதன்

கோப்பாய் நாவலர் பாடசாலையில் சம்பந்தர் குருபூசை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தலைமையாசிரியர் திரு. எம். வல்லிபுரம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் ஆசிரியர்கள் திருமதி ஆ. சின்னத்தம்பி, எஸ். நடராசா ஆகியோரும் மாணவர்கள் என். கோபாலகிருஷ்ணன், எஸ். சந்திரலீலா, ஆர். ஜெகதீஸ்வரி உட்படப் பலர் பேசினர்.

## வாலிபர் பலி

கோட்டை, புதன்

பல காலமாக இருவருக்கிடையே இருந்து வந்த வியாபாரப்போட்டி ஒருவரைப் பலிஎடுத்தது. இரண்டு இறைச்சிக் கடைக்காரர்களுக்கிடையே நடைபெற்ற இச் சச்சரவு கடைசியில் கத்திக்குத்தில் முடிந்தது.

கடவத்தை வட்டாரத்தில் நடைபெற்ற இச் சம்பவத்தில் மார்பில் கத்திக்குத்துக் காயங்களுக்குள்ளான ஜே. டி. அந்தோனி என்ற வாலிபர் ஸ்தலத்திலேயே விழுந்து மாண்டார். இது சம்பந்தமாக இறைச்சிக் கடைக்காரர் ஒருவர் கைது செய்யப்பட்டார். விசாரணை தொடர்கிறது.

தற்காலிக ஊழியர்கள் பிரதேசவாரியாகத் தெரிவு செய்யுமாறு அரசாங்கத்தைக் கோரியுள்ளது. பிரதேசவாரியாக நியமனங்கள் செய்யப்படின் நியமனங்கள் சம்பந்தமாக ஏற்படும் கஷ்டங்கள் ஏற்படாதென இக் குழு தெரிவித்துள்ளது

0 0 0

## விவசாயிகளுக்கு கடன் கிடைக்கும்

கோட்டை, புதன்

விவசாயிகளுக்கு அரசாங்கம் 75,000,000 ரூபா வரை கடன் வழங்கவுள்ளது. பல விவசாயிகள் தமது கடனைத் திருப்பிச்

## கொலை

களுத்துறை, புதன்

பெலவத்தை மனநோய் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவந்த ரூேமியல் சிங்கோ என்பவர் கொலை செய்யப்பட்டது சம்பந்தமான வழக்கு களுத்துறை மாஜிஸ்திரேட் திரு. சி. மனேகரா முன்னிலையில் விசாரணைக் கெடுத்துக் கொள்ளப்பட்டபோது வழக்கு விசாரணையை நாளைவரை ஒத்திவைத்த மாஜிஸ்திரேட் எதிரியான டி. எல். பி. டயஸ் என்பவரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

ஈழநாடு' பத்தாண்டு நிறைவுவிழா

## 26 மைல் மரதன் ஓட்டம்

(14—6—69)

### விண்ணப்பப்பத்திரம்

பெயர்: ........................................

விலாசம்

..................................

..................................

வயது: ..............................

1—6—69

..................................

கையொப்பம்

### போட்டி விதிகள்

1. போட்டியில் பங்கு பற்றுபவர்கள் 1969-ம் ஆண்டு ஜுன் மாதம் 1-ம் திகதியன்று 21 வயதுக்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும். அத்துடன் ஒரு விளையாட்டுச் சங்கத்தில் அல்லது இலங்கை A. A. A. யில் அங்கத்தவராக இருக்க வேண்டும்.

2. போட்டியில் பங்கு பற்றுபவர் ஏதாவது மருந்து குடிப்பவராக இருந்தால் விலக்கப்படத்தக்கவராக இருப்பார். உத்தியோகபூர்வமாக நியமிக்கப்பட்ட வைத்திய அதிகாரிகள் இவர் பங்கு பற்றக்கூடாது என்று தடுத்தால் அவர் போட்டியில் பங்கு பற்ற முடியாது.

3. போட்டியில் பங்கு பற்றுபவர் வீதி விதிகளைக் கவனித்து அதன்படி நடக்கவேண்டும்.

4. போட்டிஅமைப்பாளர்கள் வழங்கும் பானங்களைத் தவிர வேறெதையும் போட்டியில் பங்கு கொள்வோர் எடுத்துச் செல்லவோ, உண்ணவோ கூடாது.

5. போட்டியில் கலந்து கொள்வோர் ஓடும் போது காயம் ஏதாவது ஏற்பட்டால் அதற்கு போட்டி நிர்வாகஸ்தர் பொறுப்பாகமாட்டார்.

6. ஜுன் மாதம் 1-ம் திகதிக்குமுன் ஆறுமாதங்களாக தொடர்ந்து யாழ் மாவட்டத்தில் நிரந்தரமாக இருப்பவர்களே இப்போட்டியில் கலந்து கொள்ள முடியும்.

விண்ணப்பங்கள் யாவும் ஜுன் மாதம் 5-ம் திகதிக்குமுன் 'ஈழநாடு', த. பெ. எண்-49, யாழ்ப்பாணம் என முகவரியிட்டு அனுப்பப்படல்வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

மற்ற எல்லாவற்றையும்விட மனித குலத்தின் நலன்தானே மேலோங்கி நின்றது.

-- மகாத்மா காந்தி.

# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம், செளமியவருஷம் வைகாசி மாதம் 23 ந் திகதி (5-6-69)

## தெலிங்கானு தரும் படிப்பினை

தென்னிந்தியாவில் ஆந்திர ராஜ்யத்திலிருந்து பிரிந்து தனி ராஜ்யம் அமைக்கவேண்டுமெனக் கோரி சென்ற ஐந்து மாதங்களாக நடைபெற்றுவரும் கிளர்ச்சி இப்போது உச்சக்கட்டத்தை அடைந்திருக்கிறது. ஆந்திராவில் மட்டுமல்ல வடஇந்தியாவில் சில ராஜ்யங்களில் நடைபெறும் கிளர்ச்சிகளும் வன்முறைச் செயல்களும் அகிம்சையை உலகுக்குணர்த்திய காந்தி பிறந்த நாட்டிலேயா அதுவும் காந்திநூற்றாண்டு ஜெயந்தி விழாக் கொண்டாடப்படும் இச்சமயத்திலா இப்படியான செயல்கள் நடைபெறுகிறதென்று எவரும் வேதனையடைவர்.

வறட்சி, வெள்ளம், புயல் போன்ற இயற்கையின் சீற்றங்களும் இதன் விளைவாக ஏற்படும் உணவுப் பற்றாக்குறையும் வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற பிரச்னைகளும் அரசியல் ஆதிக்கப் போட்டிகளும் அங்கு கிளர்ச்சிகளுக்கும் குழப்பங்களுக்கும் பெரிதும் காரணமாக இருக்கின்றன. அங்குள்ள இன்றைய நிலைமையைப் பார்த்தால் ஜனநாயகத்துக்கே அங்கு ஆபத்துவந்துவிடுமோவென அஞ்சவேண்டியுள்ளது. இந்தியாவில் ஜனநாயகத்துக்குத் தோல்வியேற்பட்டால் ஆசியாவில் மட்டுமல்ல உலகிலேயே உண்மையான ஜனநாயகம் பின்னர் தலைதூக்க முடியாதென்று நிச்சயமாகச் சொல்லலாம். இந்தியாவில் ஜனநாயகம் பாதுகாக்கப்படவேண்டுமென்பதில் இலங்கை உட்பட ஜனநாயக வாழ்க்கை முறையை விரும்பும் நாடுகள் அனைத்துக்கும் அக்கறை இருக்கவேண்டும்.

இந்தியாவில் கிளர்ச்சிகளும் கலகங்களும் அதிகரித்துவருவதற்கு அடிப்படைக் காரணம் என்னவென்பதை ஆராய்ந்து அவற்றுக்கு வழிகாணவேண்டியது மத்திய அரசாங்கத்தின் பொறுப்பும் கடமையுமாகும்.

[illegible] யாகத் தெரிவித்திருக்கிறார். சிறுசிறு ராஜ்யங்களாகப் பிரிப்பதால் தேசிய ஒருமைப்பாடு குலைந்துவிடாதென்றும் சர்வோதய இயக்கத் தலைவரான திரு ஜெயப்பிரகாஷ்நாராயண் சமீபத்தில் கருத்துத் தெரிவித்திருந்தார். இந்தக் கருத்தை உதவிப் பிரதமர் திருமொரார்ஜி தேசாய்ஏற்கவில்லை. மொழிவாரி ராஜ்யங்கள் அமைக்கப்பட்டதே நல்லதல்லவென்றும் இந்தியாவில் ஒற்றையாட்சி அரசியல் அமைப்பை ஏற்படுத்துவது பற்றி தீவிரமாக ஆராயவேண்டிய கட்டம் வந்துவிட்டதென திரு வி. வி. கிரியும் மற்றும் சிலரும் சில மாதங்களுக்கு முன் கருத்துத் தெரிவித்திருந்தனர். மொழிவாரி ராஜ்யங்கள் அமைக்கப்படுவதற்கு ஆந்திராதான் மூலகாரணமாக இருந்ததால் தனித் தெலிங்கானு ராஜ்யம் அமைப்பது மேலும் பலபல சிறு ராஜ்யங்களாக நாடு சிதறுண்டுபோக வழிவகுக்குமென அஞ்சுவதில் நியாயமில்லாமலில்லை.

ஆனாலும் ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் பல நாடுகளில் ஜனநாயகம் தோல்வியடைந்துள்ளதால் ஆசிய நாடுகள் தமது நாட்டின் நிலைமை, தேவை, சூழலுக்கேற்ப ஜனநாயக அமைப்பில் மாறுதல் செய்யவேண்டியது அவசியமென்பதையே இந்தியாவில் நடைபெறும் சம்பவங்களும் எடுத்துக்காட்டுகிறது. அரும்பெரும் தியாகம் செய்து போராடிப் பெற்ற சுதந்திரத்தை இந்திய மக்களும் தலைவர்களும் இழந்துவிட ஒருபோதும் அனுமதிக்க மாட்டார்களென நம்புவோம்.

நாட்டில் ஒருபகுதி மக்களை புறக்கணிப்பதும் அவர்களை உதாசீனம் செய்வதும் என்றாவது ஒருநாள் வெடித்துக் கிளம்பி நாட்டின் அமைதிக்கே பங்கம் விளைக்குமென்பதை தெலிங்கானு சம்ப[illegible]

நல்லூரில் 29-ம் திகதி திருப்புவிழா

# நாவலர் சிலை பவனி பெருவிழா இறுதி ஏற்பாடுகள்யாவும் பூர்த்தி

## மும்மொழியிலும் வெளியீடுகள்; தமிழக பிரமுகர்கள் வருகிறார்கள்

— நமது காரியாலய நிருபர் —

யாழ்ப்பாணம், வியாழன்

இம்மாதம் 21-ம் திகதி கொழும்பிலிருந்து ஆரம்பமாகும் நாவலர் பவனி ஊர்வலம் 26-ம் திகதி கிளிநொச்சியை வந்தடைந்து 27-ம், 28-ம் திகதிகளில் யாழ்ப்பாண மாவட்டத்தில் சுற்றுலா வரும்.

22-ம் திகதி முதல் 26 ம் திகதிவரை தேசபவனி செல்லும் பாதைகளிலுள்ள நகரங்கள் அனைத்திலும் சிலைக்கு அமோகமான வரவேற்பளிப்பதற்கு ஆயத்தங்கள் நடைபெறுகின்றன. அந்நகரங்களிலெல்லாம் 'நாவலர்சிலை வரவேற்புக் குழுக்கள்' அமைக்கப்பட்டுள்ளன.

வீதிகளில் வரவேற்பு வளைவுகள், சந்திகளில் அலங்காரப்பந்தர்கள், வீட்டு வாசல்களில் பூரண கும்பங்கள், இப்படியான ஏற்பாடுகள் செய்யப்பட விருப்பதாக வரவேற்புக்குழுக்களின் செயலாளர்கள் அறிவித்துள்ளார்கள்.

### நகரங்களில் வரவேற்பு

நகர்ப் பிரமுகர்கள் நகரெல்லையில் வைத்துச்சிலையை வரவேற்க ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. சகல இடங்களிலும் மேளவாத்தியம், கலைநிகழ்ச்சிகளுடன் நாவலர்சிலை பிரதான வீதிகளில் ஊர்வலமாகக் கொண்டு செல்லப்படும்.

22-ம் திகதி இரவு நாவலப்பிட்டியிலும், 23-ம் திகதி இரவு பதுளையிலும், 24-ம் திகதி இரவு மட்டக்களப்பிலும், 25-ம் திகதி இரவு திருமலையிலும் 'சிலை' தங்கிநிற்கும் இவ்விரவுகளில் பிரதேச கலைவிழாக்கள் ஆங்காங்கு நடைபெறும்.

### முறிகண்டியில் வந்தடையும்

26-ம் திகதி பி. ப. நாலு மணிக்கு முறிகண்டியில் வைத்து யாழ்ப்பாண அரசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபர், நகரத் தலைவர்கள், பிரமுகர்களால் சிலை வரவேற்கப்பட்டு யாழ் மாவட்டங்களில் ஊர்வலமாகக்கொண்டு செல்லப்ப[illegible]

### தலைவர் அறிக்கை

'தேசிய நாகரிகத்துக்கும், சமயத்துக்கும், மொழிக்கும் புத்துயிர் அளித்தவர் நாவலர் என்றும், இவ்விழா அவர் எண்ணங்களைப் பூர்த்திசெய்வதே' என்றும் மாநாட்டுச் சபைத்தலைவர் செனட்டர் ரி. நீதிராஜா விடுத்திருக்கும் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.


### யாழ். கிளை அலுவலகம்

யாழ்ப்பாணத்தில் மாநாடு சம்பந்தமான வேலைகளைத் துரிதமாகச் செய்வதற்காக பிரதேச அலுவலகம் ஒன்று யாழ்ப்பாணம் மெய்கண்டான் கட்டிடத்தில் திறக்கப்பட்டுள்ளது.

### ஊர்வலங்கள்

29-ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறும் ஊர்வலத்தில் கலாசார ஊர்திகளின் அணிவகுப்பு மிக முக்கியமாக இடம்பெறும்.

(கா. நி.)



காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் என அழைக்கப்படும் சிவன்கோவில் கட்டட நிதிக்காக காரைநகர் யாழ்டன் கல்லூரியில் நடைபெற்ற 'மணி ஓசை' என்னும் நாடகத்தில் ஒரு காட்சி.

படம்: ஏ. வி. எம்.

## சமயம் வளர இதுதான் வழியாம்

சித்தன்கேணி, புதன்

"பர சமயங்கள் தலைதூக்கி நின்ற காலத்திலே சமய குரவர்கள் அவதரித்து சைவ சமயத்தை நிலைநாட்டினர். அவர்களுள்ளே முதன்மையானவர் திருஞானசம்பந்தராவர்" என வட்டுக்கோட்டை கிழக்குச் சித்தன்கேணித்திருமுறைக் கழகத்தினர் நடாத்திய சம்பந்தர் குருபூசையில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆசிரியர் சைவப் புலவர் வித்துவான் க. கணபதிப்பிள்ளை குறிப்பிட்டார்.


செல்வி ஏ. தெய்வானைப் பிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் வித்துவான் கணபதிப்பிள்ளை மேலும் பேசுகையில் கூறியதாவது:-

"இன்று நமது சமயத்துக்கும், மொழிக்கும் பல கோணங்களில் இருந்தும் ஆபத்துக்கள் வந்து கொண்டிருக்கின்றன. இவை நீங்கவும் வளரவும் திருமுறைகளையும் சித்தாந்தங்களையும் மக்கள் நன்கு அறியச் செய்தல் வேண்டும். ஞானசம்பந்தர் வாழ்க்கையைநாம்மேற்கொள்வதுடன் இளம் உள்ளங்களிலும் பதியச் செய்ய வேண்டும்"

காரியதரிசி பண்டிதர் த. சுப்பிரமணியம் நன்றி கூறினார்.

— —

## ஆசிரியருக்கு கடிதங்கள்



## தலைமையாசிரியர் இல்லாதபாடசாலை

கோப்பாய், புதன்

கோப்பாய்தெற்கு றோமன் கத்தோலிக்க பாடசாலை கடந்த மூன்று மாதங்களாக தலைமையாசிரியர் இல்லாத நிலையில் இயங்கிவருகின்றது. கணிதம், விஞ்ஞான பாடங்கள் கற்பிக்க ஓர் ஆசிரியரையும், தலைமையாசிரியர் ஒருவரையும் நிய[illegible]

## திருமலைச் செய்திகள்

நமது நிருபர் து. பாலேந்திரா —

### அபராதம்

திருக்கோணமலையில் சல்லி என்னும் இடத்தைச் சேர்ந்த பீ. ராசதுரை என்பவர் வெடிமருந்து பாவித்து சட்டவிரோதமாக மீன் பிடித்த குற்றச்சாட்டில் திருக்கோணமலை மாவட்ட மாஜிஸ்திரேட் முன்னிலையில் தடுப்பு அதிகாரி திரு எம். எஸ். ஏ ரசீத்தினல் ஆஜராக்கப்பட்டபோது குற்றவாளி குற்றத்தை ஒப்புக்கொள்ளவே 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது இதைக் கட்டத் தவறினால் 3 மாதக் கடூழியம் அனுபவிக்க வேண்டும் என மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார்.

0 0 0

### வேலைநிறுத்தம்

தாம் முன்னறிவித்தல் கொடுத்திருந்தும்கூட அதை அலட்சியம் [illegible] தாம் மேற்கொள்ளவிருந்த பொதுவேலைநிறுத்தத்திற்கான நாளுக்கு முன்னைநாளே படையினரைத் தமது அலுவலகத்துக்கு அனுப்பியதை வன்மையாகக் கண்டித்து ஒருநாள் முன்னதாகவே தமது என்ஜின்கள் இயங்குவதை நிறுத்திவிட்டு மின்சார அலுவலகத்திலின்றும் சகல தொழிலாளிகளும் வெளியேறினர். தம்மைப் போன்று அரசாங்கத்திலும் உள்நாட்டு அலுவலகங்களிலும், அரசாங்கம் பற்றுள்ள ஏனைய பல திணைக்களங்களிலும் வேலை பார்க்கும் தொழிலாளிகளுக்குக் கிடைப்பது போன்று "ஆபத்து அலவன்ஸ் தமக்கும் கொடுபடவேண்டும் என்று கோரியே இம்மாதம் முதலாந் திகதியிலிருந்து இந்த வேலைநிறுத்தத்தை மேற்கொள்ளவிருந்தனர்.

21-2-69ல் நடைபெற்ற ஓர் மகாநாட்டில் இந்த அலவன்ஸைத் தமக்குக் கொடுப்பதற்கு நிரந்தரக் காரியதரிசி உடன்பட்டிருந்தாரென்றும் ஆனால் திறைசேரியோ அந்த உடன்படிக்கையை நிராகரித்துவிட்டதோடு மட்டுமல்லாமல் இதேபோன்ற அலவன்ஸை வேறு இரண்டு திணைக்களத்தினருக்குக் கொடுக்கவும் தீர்மானித்திருக்கிறது என்று இவர்கள் முறைப்படுகிறார்கள். கடற்படைப் பகுதியைத் தவிர்ந்த ஏனைய பகுதி[illegible]டங்களாகத் தாம் இந்த நிலைமைக்கு சீரானதொரு சமரச முடிவைத் தேட முயன்றும் பலனளிக்க முடியாதுபோகவே தான் வேறு வழியின்றித் தாம் இந்த நடவடிக்கையிலே இறங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது என வர்த்தகசங்கங்களின் 2 இணைச்செயலாளர்கள் கையொப்பமிட்டு விநியோகிக்க ஒரு துண்டுப்பிரசுரத்தில் குறிப்பிட்டுள்ளனர். பிளாண்டன் பொயின்ற், சீனக்குடா டொக்யாட் பிரதேசங்கள் யாவும் இருளில் மூழ்கிக்கிடக்கின்றன. வேலைநிறுத்தத்தில் 70 தொழிலாளிகள் ஈடுபட்டுள்ளனர்.

0 0 0

### உற்சவம்

திருகோணமலையிலிருந்து 12 மைல்களுக்கப்பாலுள்ள தம்பலகமம் என்னும் இடத்தில் அமைந்துள்ள புராதன ஆலயங்களுள் ஒன்றான பத்தினி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் நேற்று நடைபெற்றது. அதிகாலையில் இங்கு பல ஆலயங்களிலுமிருந்து புறப்பட்ட கும்பம், கரகம், காவடிகள் யாவும் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்திலிருந்து நகர்வலமாகப் புறப்பட்டு ஆயிரக்கணக்கான பக்தர்கள் பின்தொடரக் கால்நடையாக தம்பலகாமம் சென்றடைந்தனர். இரவு முழுவதும் பொங்கல் பூசைகள் நடைபெற்றன. நான்கு ஜாமப் பூஜை ஆராதனையும் வெகு சிறப்பாக நடைபெற்றன.

0 0 0

திருக்கோணமலையிலிருந்து சுமார் 6 மைல்களுக்கப்பாலுள்ள சாம்பல் தீவு என்னுமிடத்தில் அமைந்துள்ள புராதன சைவ ஆலயமான சல்லிபபத்தினி அம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் இம்மாதம் 10:ம் திகதி நடைபெறவிருக்கிறது.

0 0 0

### ரூ. 1 லட்சம் நஷ்டம்

திருமலை துறைமுகத்தில் ஒன்றரைமாத காலமும் நடைபெற்ற தாமதவேலையால் துறைமுக கூட்டுத்தாபனத்துக்கு மொத்தமாக ஒரு லட்சத்துக்கும் மேலான பண நஷ்டமேற்பட்டதாகத் தெரியவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவில் கிளர்ச்சிகளும் கலகங்களும் அதிகரித்துவருவதற்கு அடிப்படைக் காரணம் என்னவென்பதை ஆராய்ந்து அவற்றுக்கு வழிகாணவேண்டியது மத்திய அரசாங்கத்தின் பொறுப்பும் கடமையுமாகும். ராஜ்ய அரசாங்கங்களுக்கு அதி அதிகாரங்கள் வழங்கப்பட்டால் நாட்டின் பல பிரச்னைகள் நீங்கிவிடுமென காங்கிரஸல்லாத ராஜ்ய அரசாங்கங்களும் காங்கிரஸ் ஆட்சிபீடத்திலுள்ள சில ராஜ்யங்களும் கருத்துத் தெரிவித்துள்ளன. அதிகாரங்கள் ஒரே இடத்தில் குவிந்திருப்பதால் அந்தந்தப் பிரதேசத்தில் செய்யவேண்டிய சிறியவிஷயங்கள் கூட மத்திய அரசாங்கத்தின் அனுமதிக்காக பல மாதங்கள் காத்திருக்கவேண்டி நேரிடுகிறது. இதனால் ராஜ்யங்களிலுள்ள மக்கள் விரக்தியும் வெறுப்பும் அடைகின்றனர். கலகங்களையும் கிளர்ச்சிகளையும் அடக்குவதில் அரசாங்கம் தனது சக்தியைச் செலவிடுவதற்குப் பதிலாக கலகங்களும் கிளர்ச்சிகளும் ஏற்படாமல் தடுப்பதுதான் விவேகம். எனவே ராஜயங்களுக்கு பரீட்சார்த்தமாகவாவது அதிக அதிகாரங்களைக் கொடுத்துப் பார்ப்பதால் அதிக தீமை ஏற்பட்டுவிடாது.

தெலிங்கானாப் பகுதி மக்களை ஆந்திர ராஜ்ய அரசாங்கம் பல விதங்களிலும் புறக்கணித்துவந்துள்ள தென்ற நீண்டகாலக் குற்றச்சாட்டைத் தொடர்ந்தே தனித் தெலிங்கானா ராஜ்யக் கோரிக்கை தோன்றி இன்று கிளர்ச்சிகளும் கலகங்களுமாக உருவெடுத்திருக்கிறது. தெலிங்கானா மக்களின் குறைகளை ஆந்திரத் தலைவர்களும் இந்தியப் பிரதமரும் உணர்ந்து கொண்டனர். இதனால்தான் அவர்களின் குறைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு எட்டு அம்சத்திட்டமொன்றை பிரதமர் இந்திரா உருவாக்கி சமர்ப்பித்தார் இத்திட்டம் விரைவில் அமுல் செய்யப்படுமென்றும் அவர் உறுதியளித்தார். ஆயினும் தெலிங்கானா மக்கள் அவரது சமரசத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளவில்லையென்பது அங்கு நடைபெறும் சம்பவங்களிலிருந்து தெளிவு, தனித் தெலிங்கானா ராஜ்யம் என்ற பேச்சுக்கே இடமில்லையென்றும் வன்முறைக்குப் பணிந்து கொடுக்கமுடியாதென்றும் பிரதமர் இந்திரா உறுதி

நாட்டில் ஒருபகுதி மக்களை புறக்கணிப்பதும் அவர்களை உதாசீனம் செய்வதும் என்றுவது ஒருநாள் வெடித்துக் கிளம்பி நாட்டின் அமைதிக்கே பங்கம் விளைக்குமென்பதை தெலிங்கானா சம்பவங்களிலிருந்தாவது ஒவ்வொரு நாடும் உணர்ந்து கொள்வது நல்லது.

## தீவுப்பகுதி

## தமிழரசுக் கட்சி கூடுகிறது

வேலணை, புதன்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஊர்காவற்றுறைத் தொகுதி மாவட்ட சபைக் கூட்டம் இம்மாதம் 6-ம் திகதி வேலணையில் உள்ள கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினத்தின் இல்லத்தில் நடைபெறவிருக்கிறது.

மாவட்ட சபை செயலாளர் திரு. க. திருநாவுக்கரசு, திரு. அ. அமிர்தலிங்கம் எம். பி., திரு. கா. பொ. இரத்தினம் எம். பி., திரு. வி. தர்மலிங்கம் எம். பி., திரு. வ. ந. நவரத்தினம் எம். பி. ஆகியோர் கலந்து கொள்வர். இன்றைய அரசியல் நிலைமைபற்றியும், அடுத்த பாராளுமன்ற தேர்தலுக்கு வேண்டிய ஒழுங்குகள் செய்வதுபற்றியும் கூட்டத்தில் ஆராயப்படும்.

## அச்சடிக்கும் தாள் சேதம்

கோட்டை, புதன்

யுனெஸ்கோவால் இலங்கைக்கு சில வருடங்களுக்கு முன்னர் பாடசாலைப் புத்தகங்களை அச்சடிப்பதற்காக வழங்கப்பட்ட அச்சடிக்கும் தாள், மை ஆகியவற்றை தகுந்த முறையில் பாதுகாக்கப்படாமையால் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவை ரூபா 300,000 பெறுமதியாகும். பொரளையில் உள்ள அச்சுகூட்டுஸ்தாபனத்தில் நல்ல பாதுகாப்பின்றி வைக்கப்பட்டிருக்கும் இந்த தாள், மை ஆகியன முன்னர் மலே வீதியிலுள்ள கல்வி அமைச்சில் வைக்கப் பட்டிருந்தது. பாடசாலைப் புத்தகங்களை இத்தாள்களில் அச்சடித்து பிள்ளைகளுக்கு இலவசமாக வழங்கும்படி கூறியே யுனெஸ்கோ இந்த பொருட்களை இலங்கைக்கு அன்பளிப்புச் செய்திருந்தது.

வைத்து யாழ்ப்பாண அரசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபர், நகரத் தலைவர்கள், பிரமுகர்களால் சிலை வரவேற்கப்பட்டு யாழ் மாவட்டங்களில் ஊர்வலமாகக்கொண்டு செல்லப்படும். 28-ம் திகதி மாலை யாழ். மாநகரசபை மண்டபத்தில் சபையின் சார்பாக வரவேற்பளிக்கப்பட்டு இரவு நல்லூருக்கு எடுத்துச் செல்லப்படும்.

### திறப்புவிழா

29-ம் திகதி நல்லூரில் சிலை திறக்கப்படும். 30-ம் திகதியும் அடுத்த மாதம் முதலாம் திகதியும் யாழ். திறந்த வெளியரங்கில் நாவலர் பெருவிழா நடைபெறும்.

### கண்காட்சி

மாநாட்டை முன்னிட்டுக் கண்காட்சி ஒன்றும் நடைபெறுகின்றது. இக்கண்காட்சிக்கு வேண்டிய அரிய நூல்கள், புகைப்படங்கள், முதலியவற்றைச் சேகரித்திருப்பதாகவும் மிகவும் பயனுள்ள கண்காட்சியாக இது அமையும் எனவும் நூற் கண்காட்சி உப குழுவின் தலைவரான திரு. எஸ். அம்பிகைபாகன் தெரிவித்தார்.

### மும்மொழியிலும் வெளியீடு

நாவலர் பெருமானைப் பற்றி சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் சிறு பிரசுரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இவ்விழாவை முன்னிட்டு மாநாட்டு மலர், சிலைதிறப்பு விழா மலர் என இரண்டு மலர்கள் வெளிவரவிருக்கின்றன.

### பேச்சுப்போட்டிகள்

வடமாகாணக் கல்லூரி மாணவர்கள் மத்தியில் நாவலர் மாநாட்டை முன்னிட்டு பேச்சுப்போட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. விரைவில் தொகுதிவாரியாகத் தேர்வுகள் நடைபெறவுள்ளன.

### கொடிவாரம்

இம்மாதம் 8ம் திகதியிலிருந்து 15-ம் திகதிவரை நாடெங்கும் நாவலர் கொடி வாரம் கொண்டாடப்படும்.

### தமிழக பிரமுகர்கள்

இரண்டாம் நாள் இறுதி நாள் விழாவிலும் சென்னை கிளாரினட் நடராஜனின் கிளாரினட் கச்சேரி, தமிழகத்தின் கதாகலாட்சேப புகழ் திருமதி சிவானந்த விஜயலட்சுமி அம்மையாரின் கதாப்பிரசங்கமும் இடம்பெறும்.

தண்டபாணி தேசிகரும், சிங்காரவேலனும் இம்மகாநாட்டில் கலந்துகொண்டு சிறப்புச் சொற்பொழிவாற்ற சென்னையிலிருந்து வருகின்றார்கள்



# ஆசிரியருக்கு கடிதங்கள்

## சாதிப் பாகுபாடு

வடமாகாணத்திலுள்ள இந்துக்களிடையே நிலவும் சாதிப் பாகுபாடுகளை அகற்றுவதற்கு அரசாங்கம் பெருமுயற்சி எடுத்துவரும் இச்சமயத்தில், தெற்கில் பௌத்தர்களிடையே நிலவும் சாதி வேறுபாடுகளைப் பற்றி பின்வரும் அறிஞர்கள் கூறியிருப்பதையும் அறிந்து கொள்வது நல்லது.

25-3-68இல் வெளியான 'டைம்ஸ் ஒவ் சிலோன்' பத்திரிகையில் ஓய்வுபெற்ற புதைபொருள் ஆராய்ச்சி தலைவர் சி. ஈ. கொடகும்பரை பின்வருமாறு எழுதினார்.

வடக்கில் நிலவும் சாதி முறையைப்பற்றி தங்கள் பத்திரிகையில் தொடர்ந்து வாசித்து வருகிறேன். தமது சமுதாயத்திலேயே இந்தச் சமூகப் பாகுபாடுகள் நிறைந்திருக்கும்போது பௌத்த பிக்குகள் வடக்கில் நிலவும் பிரச்னையைத் தீர்க்க முயல்வது அதிசயமாயிருக்கிறது.

மிகப் பெரியதும் செல்வாக்கு வாய்ந்ததுமான சையம் சங்கத்தில் பௌத்த மத குருக்களாக ஒருவர் வரவேண்டுமானால் அவருடைய தாய் தந்தையர் 'கோயிகம' என்ற உயர்சாதி சிங்களவராயே இருக்க வேண்டும் என்பது யாவரும் அறிந்ததே. இதன் பலனாக வேறு சாதி பௌத்த பிக்குகள் தனிச்சங்கங்கள் அமைத்துக் கொண்டனர்.

இந்து சமயம் சாதியை ஒப்புக் கொள்ளுகிறது. ஆனால் சாதிமுறையை எதிர்த்த புத்தபவானின் சீடர்களும் ஏன் சாதி வேறுபாடு காட்ட வேண்டும்.

மனிதன் தன்னுடைய நடத்தையினாலேயே மேல்சாதியோ கீழ்சாதியோ ஆகிறான் என்ற புத்தரின் போதனையைப்பற்றி வானொலியில் இரு 'ஞானமுள்ள' பிக்குகள் விவாதிப்பதை நான் கேட்டேன். அவர்கள் அந்தப் போதனையைதிரித்து ஒருவன் பூர்வ கர்மத்தினாலேயே கீழ்சாதியாகவோ மேல்சாதியாகவோ பிறக்கிறான் என்று அர்த்தம் கொடுத்தார்கள். கீழ்சாதியாகப் பிறந்த ஒருவன் உன்னதமான காரியங்களைச் செய்ய நினைப்பது பாவம் என்றும் அவர்கள் தீர்மானித்தார்கள்.

சுன்னாகம், கந்தரோடை முதலிய இடங்களுக்கு நான் சென்றபோது அங்குள்ள சில வாலிபர்கள் பௌத்த பிக்குகளாக வேண்டுமென்று என்னிடம் தெரிவித்தார்கள். சையமிய சங்கத்தைச் சேர்ந்த யாழ்ப்பாணம் நாகவிகாரையின் தலைமை பிக்கு இவர்களை ஏற்றுக் கொள்வாரா? முதலில் தங்களுடைய கண்களில் உள்ள அழுக்கை அகற்றிக் கொண்டல்லவா மற்றவனுடையகண்ணில் வளரும் கழலையை நோக்க வேண்டும்?

'இலங்கைசரித்திரம், சமூகம், கலாசாரத்தில் இந்தியாவின் பங்கு' என்ற நூலில் ராகவன் பின்வருமாறு எழுதுகிறார்:

'புத்தர் காலத்தில் இந்தியாவில் தீண்டாமை இருந்திருக்கிறது. அவருடைய போதனைகளிலிருந்து இது தெளிவு. புத்தசமயம் வருவதற்கு முன்பு இலங்கையில் சமூகப் பிரிவுகள் இருந்ததாகத் தெரியவில்லை. புத்த சமயம் பரவியபின்பே பல தரப்பட்ட சமூகங்கள் இலங்கையில் உற்பத்தியாயின.'

'தற்காலக இலங்கையில் சாதிமுறை' என்னும் நூலில் பிறைஸ்றையன் எழுதுவதாவது:

எட்டாவது நூற்றுண்டு பௌத்த குருமார் சங்கத்தில் கமக்காரர் என்ற உயர் சாதியினரே ஆதிக்கம் செலுத்தினர்கள்.'

மனிதனுக்கும் மனிதனுக்குமிடையே காணப்படும் வேற்றுமைகளை அகற்ற வட பகுதியில் முயற்சி செய்வது போல தென்னிலங்கையிலும் அரசாங்கம் ஏன் முயலவில்லை என்று கேட்கத் தோன்றுகிறது. தென்னிலங்கை மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்றே அரசாங்கம் விரும்புகிறது. ஆனால் அவர்களுக்கு மாறாகப் போகப் பயப்படுகிறது. அப்படிச் செய்தால் அதிகாரபீடங்களில்தொடர்ந்து இருக்க முடியாதென்று அவர்களுக்குத் தெரியும்.

ஜே. ஆர். சின்னத்தம்பி

286, புல்லேர்ஸ் வீதி,
கொழும்பு,
2-6-69.

கடந்த மூன்று மாதங்களாக தலைமையாசிரியர் இல்லாத நிலையில் இயங்கிவருகின்றது

கணிதம், விஞ்ஞான பாடங்கள் கற்பிக்க ஓர் ஆசிரியரையும், தலைமையாசிரியர் ஒருவரையும் நியமிக்குமாறு மேற்படி பாடசாலை பெற்றோர்-ஆசிரிய சங்கம் சம்பந்தப்பட்டவர்களைப் பலமுறை கோரிவந்ததாம். ஆனால் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனப் பெற்றோர் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

வன்சை வேறு இரண்டு திணைக்களத்தினருக்குக் கொடுக்கவும் தீர்மானித்திருக்கிறது என்று இவர்கள் முறைப்படுகிறார்கள். கடற்படைப் பகுதியைத் தவிர்ந்து ஏனைய பகுதிகளில் மட்டும் இருந்தே, 30,000 ரூபாவுக்கு மேலாக இந்த மின்சாரநிலையத்துக்கு வருமானம்வருகிறது, ஆனால் இவர்களுக்கு வேண்டிய அந்த ஆபத்து அலவன்ஸ் கொடுப்பதானல் 1400 ரூபா மட்டுமே மேலதிக செலவாகும். 1961-ம் ஆண்டிலிருந்தே கடந்த 8 வரு

## தீண்டாமை ஒழிப்பு

1-6-69-ல் 'ஈழநாடு' பத்திரிகையில் ''ஆத்மசோதனை தேவை'' என்னும் தலையங்கத்தின் கீழ் பிரசுரிக்கப்பட்ட குறிப்புரையை நாம் மெச்சாமலிருக்க முடியாது. திருவள்ளுவரின் அருட் போதனை போலவும் காந்தியடிகளின் மணிவாக்குகள் போலவும் தங்களுடைய புத்திமதிகள் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படத்தகுதியுள்ளவை. இக்கட்டுரையை எமது தமிழ் அரசியல், சமூகத்தலைவர்கள் ஒரு மடலில் ஒட்டி தங்கள் வீடுகளில் தொங்கவிட்டு ஒவ்வொரு நாளும்ஒருமுறை வாசிப்பார்களேயானல் தீண்டாமை ஒழிப்பைப் பற்றி வெறும் மேடைப் பேச்சோடு நிற்காது செயலிலும் இறங்கமிகவும் உதவியாயிருக்கும்.

தமிழராகப் பிறந்து தமிழை தமது தாய் மொழியாகக்கொண்ட சிறுபான்மைத்தமிழர், தமிழினத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல எனப் புறக்கணித்து வரப்படுகிறார்களென்பது நாடறிந்த உண்மையே. ஆத்திரமடைந்தசிலர்பலாத்காரத்தினல்தான் தமது உரிமைகளைப் பெறமுடியுமென்றும் இன்னும் சிலர் பௌத்த மதத்தைத்தழுவவும், சிங்களவர்களாக மாறுவதற்கும் எண்ணங்கொண்டிருக்கிறார்கள்.

இவர்களுக்கு எதிராக கண்டனக் கூட்டங்களும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும் பகிஷ்கார முயற்சிகளும் நடாத்தி பிரச்னையை தீர்க்கமுடியாது.

சங்கானை, கொடிகாமம், அச்சுவேலி முதலிய கிராமங்களில் சாதிக்கலவரங்களினல் எரிந்தவீடுகள், முறிந்த எலும்புகள், பறிபோன உயிர்களைப்பற்றி கிஞ்சித்தேனும் கரிசனையை தமிழ்த் தலைவர்கள் காட்டாத பொழுது, ஆட்சி மன்றத்திலே சிறுபான்மைத்தமிழர்களுக்காக அனுதாபக்குரல் எழுப்பியவர்கள் சிங்கள சமூகத்தைச் சேர்ந்தவர்களே என்பதை தமிழினம் மறந்துபோகக்கூடாது.

தமிழினம் அழியப் போகிறதே எனக் கண்ணீர் சிந்துகிறவர்கள், சிறுபான்மைத் தமிழினம் அழிந்துகொண்டு போகிறத என இவ்வளவு காலம் சிந்தித்தார்களா? ஆலயப்பிரவேச முயற்சிகளுக்கு எதிராகத் திரண்ட குண்டர்படைகளுக்கும் கதவடைப்புகளுக்கும் எதிராக ஆட்சேபனை தெரிவித்து கண்டனக்கூட்டங்கள், ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடாத்த ஏனே எமது ஈழத் தமிழ் மாணவர்களும் அரசியல் தலைவர்களும் வாலிப முன்னணியினரும் முன்வரவில்லை என்னும் கேள்வியை இங்கு நாம் கேட்பது மிகப் பொருத்தமாகும்.

காலத்துக்குக் காலம் தோன்றியதீண்டாமைஒழிப்புக்குழுக்களையும் அவற்றின் அகால மரணத்தைப் பற்றியும் சிறுபான்மைத் தமிழர் நன்கு அறிவார்கள்.

ஆகவே மேடைப் பேச்சுகளில் மாத்திரம் நிற்காது செயலில் இறங்குங்கள்எனத் தமிழ் தலைவர்களைக் கேட்கிறோம். 1956-ம் ஆண்டில் அப்போதிருந்த அரசியல் சூழ்நிலைகாரணமாக யாழ்ப்பாணத்திலுள்ள ஆலயங்களையும் தேநீர்க்கடைகளையும், சிகை அலங்கார நிலையங்களையும், சலவைத் தொழிற்சாலைகளையும், இரண்டுவாரங்களில் திறந்துவிட ஆர்வம் காட்டியது போல, இப்பொழுதும் அந்தரங்க சுத்தியுடன் செயலாற்றுவார்களேயானல் சிறுபான்மைத் தமிழர் பௌத்தர்களாகவோ சிங்களவர்களாகவோ மாற எண்ணமாட்டார்கள். அப்படி மாறினவர்களும் திரும்பவும் சைவர்களாகவும், தமிழ்மொழிப் பற்றுள்ளவர்களாவும் வந்துசேர்வார்கள் என்பது நிச்சயம்.

சிறுபான்மைத்தமிழன்
யாழ்ப்பாணம்.

யால் துறைமுக கூட்டுத்தாபனத்துக்கு மொத்தமாக ஒரு லட்சத்துக்கும் மேலான பண நஷ்டமேற்பட்டதாகத் தெரியவருகிறது.

0 0 0

### அம்புலன்ஸ் கிடையாது

திருக்கோணமலை அரசினர் ஆஸ்பத்திரியில் உத்தியோகப் பற்றற்ற மேற்பார்வையாளர் திரு. சந்திரா விஜயசூரியா திருக்கோணமலைஆஸ்பத்திரியின் சீர்கேடு பற்றிப் பல புகார்கள் செய்துள்ளார் சுகாதார அமைச்சர் திரு. ஈ. எல் சேனநாயக்காவுக்கு இவர் அனுப்பிய மகஜர் ஒன்றில் திருமலை ஆஸ்பத்திரிக்குச் சொந்தமான அம்புலன்ஸ் தற்போது பாவனையில் இல்லை என்றும் ஆஸ்பத்திரி வார்ட்டுகள் யாவும் நோயாளிகளால் நிறைந்து அண்மையில் இங்கு பீடித்திருந்த காய்ச்சலினல் நோயாளிகள் அதிகரித்து இடம் பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதாயும் இந்த நோயாளிகளுக்குத் தற்காலிகமாகக் கட்டடம் ஒன்றை நிறுவவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளதோடு புதிதாகக் கட்டப்பட்டு வரும் சத்திர சிகிச்சை நிலையத்தில் வேலைகள் தாமதமாகி வருவதாயும் எடுத்துக்காட்டியுள்ளார்.

0 0 0

### புகார்

கிளிவெட்டி ப. நோக்கக் கூட்டுறவுச் சங்கத்தினல் பல்லாயிரக் கணக்கான ரூபா செலவில் கட்டி எழுப்பப்பட்ட கட்டிடம் ஒன்று நீண்ட காலமாக குறை நிலையில் இருப்பது குறித்து அங்கத்தவர்கள் மிகக் குறைப்படுகின்றனர். இது சம்பந்தமாகக் கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளருக்கும் புகார் செய்யப்பட்டிருப்பதாக அறியப்படுகின்றது.

0 0 0

### அதிசயக் கன்றுக்குட்டி

எட்டுக்கால்கள், நான்கு காதுகள், நான்கு கண்கள் உடைய அதிசய கன்றுக்குட்டி ஒன்றை கந்தளாய், கூனித்தீவு என்னும் இடத்திலுள்ள பசு ஒன்று ஈன்றுள்ளது. இந்த அதிசய கன்றுக்குட்டி பிறந்த சிலமணி நேரத்துக்குள் இறந்துவிட்டது

0 0 0

### கிண்ண தினம்

திருக்கோணமலைசாரணிய இயக்கத்தினரின் கிண்ண தினம் நாளை வெகுசிறப்பாகக் கொண்டாடப்படவிருக்கின்றது. வழக்கறிஞர் திரு. எம். கே. செல்வராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்,

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு ஜூன் மாதம் 5-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org